
www.eelamview.com


# விடுதலைப்புலிகள்

குரல்: 65 16 - 30 சித்திரை 1996 அன்பளிப்பு: 5/=


## உள்ளே


- சலியாது போராடும் மக்கள் விடுதலையை அடைவர்
- வாழ்வதற்கான போர்
- மனங்களை வெல்லும் வஞ்சக நாடகம்
- அதிரடிப்படையின் படுகொலைகள்
- வாழ்வதெனில் தமிழர்களாக அல்லது கல்லறைகளாக ..

### சிங்கள அரசுக்கும் சர்வதேசத்திற்கும் புலிகள் விடுக்கும் செய்தி :

# படையெடுப்புகள் தீவிரப்பட்டால் சமரசம் நிரந்தரமாக முறியும்!

### நீண்ட போர் நெருக்கடிக்குள் சிங்களப்படை மீள முடியாமல் சிக்கப்போகிறது

படையெடுப்புக்களைக் கைவிட்டு, ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து தனது படைகளை வெளியேற்றி அரசியற் தீர்வுக்கான சமரசப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு வழிவகை செய்யாமல் -

வடபிராந்தியத்தில் தொடர்ந்தும் படையெடுப்புக்களைத் தீவிரப்படுத்தி இராணுவ வழிமுறையில் தீர்வுகாணவே சிங்கள அரசு முனையுமானால், அது பேச்சுவார்த்தைகளுக்கான ஏதுநிலையை நிரந்தரமாகவே பாதிக்கும் என்பதைப் புலிகள் இயக்கம் சொல்லிவைக்க விரும்புகின்றது.

அத்தோடு - வடக்கில் அகலக் கால்வைத்துப் பரவும் சிங்களப் படை தன் நோக்கில் உடனடி வெற்றிகளைப் பெறுகின்றபோதும், எதிர்காலத்தில் பேரழிவுமிக்க தோல்விகளைச் சந்திக்கப்போகின்றது என்பதுவே உண்மையுமாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீது இருபெரும் படையெடுப்புகளை நடாத்திய சிங்களப்படை, அதன் கணிசமான பகுதியை ஆக்கிரமித்துள்ளது. வெளியேற முடியாமல் சிக்கிக்கொண்டுள்ள இலட்சக்கணக்கான மக்களை, தன்னிடம் விரும்பி வந்தவர்கள் என்று கூறும் சிங்கள அரசு, தான் தமிழ் மக்களின் மனங்களை வென்றுவிட்டதாகப் பிரச்சாரப்படுத்தியும் வருகின்றது.

எனினும் - யாழ்ப்பாணக் கடல் நீரேரியூடாக குடாநாட்டுக்கிருந்த தனியொரு கடற்பாதையையும் கிளாலி இறங்குதுறையையும், தொடர்ந்து எறிகணை மற்றும் வான்படைமூலம் தாக்கி, மக்கள் வெளியேற்றத்தைத் தடுத்துக் கொண்டு நகர்ந்த சிங்களத் துருப்புக்கள், கிளாலி இறங்குதுறைப் பகுதியைக் கைப்பற்றி மக்களைக் குடாநாட்டுக்குள் சிறைப்படுத்தினர் என்பதுவே உண்மையாகும். தப்பித்து வெளியேற முடியாமல் சிக்கிவிட்ட குடாநாட்டு மக்கள், இன்று, விரும்பாவிட்டாலும் விரும்பியவர்களைப் போல சிங்களப் படை நிர்வாகத்துக்குள் வாழ வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் அகப்பட்டுள்ளனர்.

வலிகாமப் படையெடுப்பின் போது அங்கிருந்து முற்றுமுழுதாக வெளியேறிய தமிழ் மக்கள், தமது அரசியல் நிலைப்பாட்டை உலகிற்கும், சந்திரிகா அரசாங்கத்துக்கும் →

## கண்ணில் தெரியுது வானம்!

துப்பாக்கியைச்
செங்கோலாக்கிக் கொண்ட
அதிகாரமே!

கடித்துக் குதறும் உன்
வாய் திறந்து
எங்களுக்கு
ஆறுதல் சொல்லாதே

உன்னால் இன்று
கால்களில் காயம்பட்ட
எம் சூரியன்
நாளை
சிறகுகளோடு வரும்.

நிலத்தில்...
நீரில்...
வானில்...
உன்னை முற்றுகையிட்டு
முகமழிக்கும்.

உன் ஆயுதங்களால்
எட்டுத் திசைகளை
வளைத்தாலும்
'விடுதலை' தீவாகாது
ஒருநாளும்.

குண்டு வீசும் உன்
விமானங்களுக்கு மேலே
அது சிறகடிக்கும்.
பீரங்கி தாங்கிய உன்
கப்பல்களுக்குக் கீழே அது
நீந்திக் கொண்டிருக்கும்.

உன் துப்பாக்கியை
வெளியெடுத்து
உறைக்குள் பார்...
அந்த வெற்றிடத்தை அது
நிரப்பிக் கொண்டிருக்கும்.

பேனாக்களின்
உதடுகளைக் கிழிப்பதால்
காலத்தின்
குரல்வளையை நீ
நெரித்துவிட முடியாது.
அது
எல்லா வழிகளிலும்
பேசும்.

விஷம் ஊறும்
மார்பகங்களோடு
தாய்மைப் பாசம் காட்டும்
உனது அரசியலில் -
பொய்மையின்
முந்தானைகளாய்
உயரும்
தேசியக் கொடிகள்.

அதிலிருந்து
சிந்தும் சீழ்த்துளிகளை உன்
பூக்கள் மறைக்கலாம்.

நடத்து

வரலாறு
பாடம் கேட்காது;
போதிக்கும்.

கால்களில்
விலங்குகள் பூட்டி
சிறகுகளைக்
கோதிவிடும் உனது
மக்களாட்சியில் -
நீ மறுத்தாலும்
வானம்
ஒருநாள் எம்
கைவசமாகும்!

- பழநி பாரதி

# தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

www.eelamview.com

www.eelamview.com



விடுதலைப் புலிகள்

Liberation Tigers Of TAMIL EELAM

# புலிகளின் குரல்

# சலியாது போராடும் மக்கள் விடுதலையை அடைந்தே தீருவர்!

குடாநாட்டை விடுதலைப் புலிகளிடம் இருந்து பறித்தெடுத்துவிட்டால் விடுதலைப்போராட்டம் செத்துவிடும் என்றொரு கணிப்பு, சிங்கள ஆட்சியாளர்களிடம் இருந்து வந்துள்ளது. போராட்டத்தின் உயிர்நாடி குடாநாடு என்ற நினைப்பின் விளைவே மேற்குறித்த கணிப்பாகும்.

குடாநாட்டை ஆக்கிரமிக்கும் நோக்குடன், கடந்த 5 வருடகாலமாக, படையினர் தீவிர முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். இராணுவ – பொருளாதார – உளவியல் பரிமாணங்களில் அந்த நில ஆக்கிரமிப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்த முயற்சியை முறியடிக்க இராணுவ – அரசியல் ரீதியில், புலிகள் இயக்கம் பலவாறாக முயற்சித்தது; சிங்களப்படையின் பெறுமதி மிக்க உயிர்களை அழித்து, சிங்களதேசத்திற்கு பாரிய ஆள் – பொருள் இழப்புகளையும் உண்டுபண்ணி இருந்தது.

ஆயினும், குடாநாட்டைக் கைப்பற்றுவது என்பதைத் தமது பிரதான இலட்சியமாக, சந்திரிகா – ரத்வத்த அரசாங்கம் வலியுறுத்திவந்தது; அந்த இலட்சியத்திலேயே அவர்களது அரசியல் எதிர்காலமும் தங்கியிருக்கும் அளவுக்கு, அது, அதிமுக்கியத்துவமும் அடைந்தது. இதனால், என்ன விலைகொடுத்தாவது – எவ்வளவு விலைகொடுத்தாவது – குடாநாட்டைக் கைப்பற்றிவிடுவதில் அரசாங்கம் தீவிரம் காட்டியது. ஆயுதபலத்தைத் திடீரெனப் பெருக்கி – ஒட்டுமொத்த படைபலத்தில் பெரும் பகுதியைக் குடாநாட்டிற்குள் குவித்து, ஆக்கிரமிப்புச் சமரைத் தொடக்கியது; இறுதியில், குடாநாட்டின் கணிசமான பகுதி நிலத்தையும் குறித்தொகை மக்களையும் எதிரிப்படை கையகப்படுத்தி விட்டது.

தமிழரின் வரலாற்று – கலாசார மையம் இப்போது, எதிரிப்படையின் இரும்புப் பிடிக்குள் உள்ளது. தமிழர் படையின் ஆளுகைக்குள் – கடந்த பல வருடங்களாக இருந்த குடாநாட்டின் பெரும்பகுதி நிலம் இப்போது, சிங்களப் படையின் கைகளிற்குள் சிக்கியுள்ளது. போராட்டம் ஒரு நெருக்கடியைச் சந்தித்துள்ளது என்பதை மறுப்பதற்கிலலை.

ஆயினும், தமிழர் படையானது – தனது படைபலத்தைப் பாதுகாத்தபடி – தளத்தை மாற்றிக்கொண்டுவிட்டது.

நிலைமைகளுக்கு ஈடுகொடுக்கும் முகமாக, புலிகள் இயக்கம், தனது பிரதான தளப்பிரதேசத்தை அல்லது ஆட்சிமையத்தை மாற்றியபடி போராட்டத்தைத் தொடர்ந்து நடாத்துவது, ஒரு வழமையான செயலாகும். நெருக்கடிகளுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கும் – போராட்டத்தை உயிர்த்துடிப்புடன் வைத்திருப்பதற்கும், இந்தச் செயல்முறை அவசியமாகின்றது.

ஆரம்பகாலத்தில், தமிழ்நாட்டில் கால்பதித்து நின்ற போராட்டத்தின் மையம், பின்னர் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டது. இந்திய ஆக்கிரமிப்புக் காலகட்டத்தில் அது முல்லைத்தீவுக் காட்டிற்குள் இடம்மாறும்படி நிர்ப்பந்திக்கப்பட்டது. அங்கிருந்தபடி போராட்டம் வளர்த்தெடுக்கப்பட்டு, மையம் மீண்டும் யாழ்ப்பாணம்சென்றது. இப்போது, போராட்டத்தின் தளப்பிரதேசம் – ஆட்சிமையம் – என்ற பாத்திரத்தை வன்னிப் பெருநிலப்பரப்பு வகிக்கின்றது.

போராட்டத்தின் தேவை மற்றும் நிர்ப்பந்தங்கள் கருதி தளப்பிரதேசங்கள் மாற்றப்பட்டாலுங்கூட, தமிழீழ விடுதலைப் போராட்டம் முனைப்புடன் இருந்து வருகின்றது. பாரிய வெற்றிகளைத் தொடர்ந்தும் அல்லது மோசமான நெருக்கடிகள் காரணமாகவும் – போராட்டத்தை முன்னோக்கிச் செலுத்துவதற்காக – தளப்பிரதேசங்களை மாற்றிக்கொண்டு வருவது, எமது போராட்டத்தின் பிரதான இயல்பாக இருந்துவந்துள்ளது.

ஒரு விடுதலைப் போராட்டத்தின் விதி அதன் மக்கள் பலத்திலேயே தங்கியுள்ளது. நிலங்களைக் கைப்பற்றி – மக்களைக் கட்டுப்பாட்டிற்குள் எடுப்பதன்மூலம் இந்த மக்கள் ஆதரவை இல்லாதுசெய்துவிடலாம் என்று, எதிரி நினைக்கின்றான். தென் தமிழீழத்தில் இந்த சித்தாந்தத்தை நடைமுறைப்படுத்திய எதிரிப்படை, பெருந்தொகைத் தமிழர்களைப் படுகொலை செய்வதில் வெற்றி பெற்றதேயொழிய, போராட்டத்திற்கான மக்கள் ஆதரவை அதனால் தடுக்க முடியவில்லை; மாறாக, வளர்த்துவிட்டுள்ளது என்பதே உண்மையாகும்.

''இன்முகம் காட்டும்'' ஒரு வஞ்சக நாடகத்தை – தனது ஆக்கிரமிப்பிற்குள் உள்ள – குடாநாட்டில், எதிரிப்படை இப்போது நடாத்துகின்றது. ஆயினும், அங்குள்ள மக்கள்மீது ஒரு பெரும் அவலத்தை எதிரி விதைக்கப்போகின்றான் என்பதே, கொடூரமான யதார்த்தமாகும்.

இத்தகைய கொடூர வாழ்க்கையையே வியட்னாம் மக்களும் – எரித்திரிய மக்களும் அனுபவித்தனர்; ஆயினும், போராட்டத்தில் அவர்கள் காட்டிய உறுதியும், சலியாத முயற்சியும், இறுதியில் அந்த மக்களுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தன.

போராடும் மக்கள்மீது துன்பச் சுமையைச் சுமத்தி – போராட்டத்தை நசுக்க முயல்வது, எதிரி அரசுகள் கடைப்பிடிக்கும் ஒரு ஆக்கிரமிப்பு நடவடிக்கை. இது வரை காலமும் இதையே, எமது மக்கள் மீது சிங்கள அரசும் பிரயோகித்துவருகின்றது. ஆனாலும், எமது மக்கள் அதற்கு அடிபணியவில்லை என்பது இதுவரைகால வரலாறு; இப்போதும் அந்த உறுதியையே போராட்டம் வேண்டி நிற்கின்றது.

ஒரு நாட்டின் படையைப்போல ஒரு விடுதலைச் சேனை இருப்பதிலலை. பல வசதியீனங்களை – பல சவால்களை – எதிர்கொண்டவாறு, விடுதலைச் சேனை வளரவேண்டும். இழப்புகளும் – பின்னடைவுகளும்,ஒரு விடுதலைச் சேனையை சதா துரத்திக்கொண்டிருக்கும்; ஆயினும், விடுதலையின் அவசியமும், அது காரணமாக மக்கள் வழங்கும் பேராதரவும் விடுதலைச்சேனைக்கு இறுதிவெற்றியைப் பெற்றுக்கொடுக்கும்; இது வரலாற்று அனுபவமாகும்!

## வடக்கில் படையெடுப்புகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்தியம்பினர். பின்னர் குடாநாட்டில் மிகப்பெரும் மனிதச் சங்கிலிப் போராட்டமொன்றை நடாத்திய தமிழ் மக்கள், ''சமாதானத்துக்கான போர்'' என்ற சந்திரிகாவின் ஆக்கிரமிப்புக் கோட்பாட்டை நிராகரித்து, தமது சுய கருத்தையும் பகிரங்கமாகவே வெளிப்படுத்தினர். ஆனாலும், இப்போது ஆக்கிரமிப்புப் படையெடுப்பை நடாத்திய சந்திரிகா அரசாங்கம், குடாநாட்டு மக்களைச் சிறைப்பிடித்து, தனது நிர்வாகத்தின் கீழ் வாழக் கட்டாயப்படுத்தியுள்ளது.

இதே சமயத்தில் – ஆக்கிரமிக்கப்பட்ட இடங்களிலிருந்து படைத்துருப்புக்களை வெளியேற்றி, இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் தம் சொந்த வாழ்விடங்களில் மீளக் குடியேறி 'இயல்பு வாழ்வை' ஆரம்பிக்கக் கூடிய ஏதுநிலையை உருவாக்கினால் மட்டுமே, சர்வதேச மத்தியஸ்தத்துடன் ஏற்பாடு செய்யப்படும் சமரசப் பேச்சுவார்த்தைகளில் தான் கலந்துகொள்ள முடியும் என, வலிகாமம் ஆக்கிரமிக்கப்பட்ட போதே புலிகள் இயக்கம் அறிவித்துவிட்டது. ஆனால், அதன் பின்பும் தென்மராட்சியூடாக மேற்கொள்ளப்பட்ட குடாநாட்டுப் படையெடுப்பானது, சமாதானப் பேச்சுக்களுக்கான வாய்ப்புக்களை மேலும் கேள்விக்குரியதாக்கிவிட்டது.

இந்த நிலையில் – அடுத்த கட்டமாக வன்னிப் பெருநிலப்பரப்பு மீதான படையெடுப்புக்கும் சிங்களப்படைகள் தயாராகி வருகின்றன.

தொடர் நடவடிக்கைப் போர் முறைத் திட்டத்தின் அடுத்த கட்டமாக அது ஆரம்பிக்கப்படவிருப்பதாக, சிங்களத் தரைப்படையின் புதிய தளபதி லெப். ஜெனரல் றொகான் டி. எஸ். தளுவத்த தனது பதவியேற்பு உரையின்போது கூறியும்விட்டார். இதிலிருந்து, தொடர்ந்தும் படை நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவதிலேயே சிங்களத்தரப்பு முழு அக்கறை செலுத்துவதாகவே அறிய முடிகிறது.

தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு இராணுவ வழிமுறையைக் கையாண்டு தீர்வுகாணும் மூலோபாயத்தையே, சந்திரிகா அரசாங்கம் நடைமுறைப்படுத்த முடிவெடுத்துவிட்டதெனில், அது – சமரச வழிகளில் அரசியற் தீர்வு காணும் பேச்சுவார்த்தைகளுக்கான கதவுகளை நிரந்தரமாகவே மூடிவிடும் என்பதை எடுத்துக்கூறும் புலிகள் இயக்கம் –

வடக்கில் நிலப்பரப்புக்களைப் பிடித்து நகரும் சிங்களப் படைகள், உடனடி வெற்றிகளைப் பெற்று அகலக் கால்வைத்து நிலைகொள்ளும்போதும், நீண்ட போர் நெருக்கடிக்குள் சிக்கி, எதிர்காலத்தில் மீள முடியாத பேரழிவுமிக்க படுதோல்விகளைச் சந்திக்கப் போகின்றன என்பதையும், சொல்லிவைக்க விரும்புகின்றது.

www.eelamview.com

www.eelamview.com



# மனங்களை வெல்லும் வஞ்சக நாடகம்: வரலாறு சொல்லும் செய்திகள்!

தமிழீழ மக்கள் இப்போது, தம்முன்னால் பல்லைக் காட்டி ''ஆரியக் கூத்தாடி'' காரியம் பார்க்கும் சிங்கள இராணுவத்தைக் கண்டு, திகைத்துத்தான் போய்விட்டார்கள்! அழுகையை - அவலத்தை - முதல்நாள் தம்மேல் விதைத்தவர்கள், மறுநாள் தாம் சிரிப்பதாகப் புகைப்படமெடுத்து புதினப் பத்திரிகைகளில் போடுகின்ற விபரீதத்தை, அடக்க முடியாத ஆச்சரியத்தோடு கவனிக்கின்றார்கள். பல நூற்றாண்டுகால தொடர் அடிமை வாழ்வில் இன்னொரு பாடத்தை எம்மக்கள் கற்கின்றார்கள். ஏனென்றால், குருதியை உறிஞ்சும் நீளமான கடைவாய்ப் பற்களைக் கோரமாகக் காட்டியவர்கள் இப்போது, இரண்டு நாள் 'போனஸ்' சிரிப்பாக 32 பற்களையுமல்லவா வரிசையாகக் காட்டுகின்றார்கள்! நஞ்சை விதைத்தவர்கள் இப்போது, இனிப்பை நீட்டுகின்றார்கள்; ''பற தெமிலோ'' என்றவர்கள் ''பாவம் எம்மக்கள்'' என்கின்றார்கள்; துப்பாக்கிகளைக் காட்டியவர்கள் கரங்களை நீட்டுகின்றார்கள். கடுகடுவென கடுவன்பூனை போலிருக்தம் ரத்வத்தையின் முகங்கூட, சாந்த சொரூபமாகிவிட்டது! இவையெல்லாம் ஒன்றும் வரலாற்றில் புதியதுமல்ல; புதினமுமல்ல. முன்பு எமது மண்ணிலே கந்தகத்தை விதைத்தவர்கள் இப்போது, வஞ்சகத்தை விதைக்கின்றார்கள்; அவ்வளவுதான்!

இவ் வினை விதைப்பும் காலங்காலமாக நடந்துவருவதுதான். அடுத்தவன் தாயகத்தில் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்புச் செய்வோர் - விடுதலைநோக்கி விரைவோர்மீது பெரும் படையெடுப்பினை நிகழ்த்துவோர் - தம்மை நியாயப் படுத்தி, நிலைப்படுத்த அரங்கேற்றும் மிகப் பழைய நாடகமிது; போடும் மிகப் பழைய முகமூடியிது - பூசும் அரிதாரமிது - சகல இராணுவ ஆக்கிரமிப்பாளர்களுக்கும் அவர்களது இராணுவ, அரசியல் ஆலோசகர்கள் கிளிப்பிள்ளைபோலத் திரும்பத் திரும்பச் சொல்லும் போருத்தியிது. படையெடுப்புகளை, ஆக்கிரமிப்புக்களை, படுகொலைகளை, நீளும் நிலப் பறிப்புக்களை மறைக்க இடும் நிழற்திரையிது. இதுதான், ''மக்கள் மனங்களையும் இதயங்களையும் வெல்லும்'' கோட்பாடு! ''நிலங்களைப் பிடித்து என்ன பயன் - மக்கள் இதயங்களைக் கவராவிட்டால்?'' என, அராலியில் அலறிச் செத்த 'கொப்பே'யின் கோட்பாடு இது. சந்திரிகா அம்மையாருக்கு அறிவுஜீவிகள் வலியுறுத்த, இராணுவத்திற்கு இப்போது சந்திரிகா அம்மையார் வலியுறுத்தும் நவீன கோட்பாடுமிதுதான்.

வியட்னாம் போரின்போது, தென் வியட்னாம் மக்களை வட வியட்னாமின் வியட்கொங் சர்வாதிகார - பயங்கரவாத - இயக்கத்திலிருந்து காப்பாற்றுவதாகக் கூறி அமெரிக்கா பின்பற்றிய உத்தியுமிதுதான். இந்த உத்தி எதிர்பார்த்த வெற்றியைக் கொடுத்திருந்தால், 1975ஆம் ஆண்டளவில், போட்டது போட்டபடி சைகோனை விட்டுவிட்டு ஓட்டம் பிடித்திருக்கவேண்டிய தேவை, அமெரிக்காவிற்கு ஏற்பட்டிருக்காது; இந்த உத்தி வெற்றியளித்திருந்தால், ஆப்கான் மக்களைப் பிற்போக்குவாத - மரபுவாத - மதப்போராளிகள் பிடியிலிருந்து விடுவித்து, நவீன அறிவியல் உலகிற்குள் பிரவேசிக்கவைக்கப்போவதாகக் கூறிய சோவியத்நாடு, இறுதியில் 'சட்டி சுட்டதால் கை விட்டது' என்று கூறி, சொல்லாமற் கொள்ளாமல் தனது படைகளை மீளப்பெற்றிருக்காது; அல்லது எரித்திரிய மக்களின் மனங்களை வெல்லப்போன எத்தியோப்பிய அதிபர் கேணல் கெய்லி மரியம் இப்போது, சிம்பாவேயில் தோட்டமொன்றில் மறைந்துவாழ நேரிட்டிருக்காது. சோவியத்தின் ஆளணி, படைபல உதவியோடும் அவர்களின் நவீன அறிவியல், உளவியல் பரப்புரை உத்திகளோடும், எரித்திரிய மக்களை ஈ. பி. எல். எவ். (EPLF) போராளிகளின் பிடியிலிருந்து விடுவிக்கப்போன கேணலுக்கு என்ன நடந்தது? இப்போது ரத்வத்தை கூறுவதைவிட ஒருபடி மேலேபோய் அன்று, 'ரிவிரச' இராணுவ நடவடிக்கையை ஒத்த - 1982ஆம் ஆண்டு எரித்திரியா மீதான 'சிவப்பு நட்சத்திர தாக்குதல் நடவடிக்கை' - வெற்றியின்போது, மெங்குஸ்து கெய்லி மரியம் என்ன கூறினார்? ''இப்போது நாம் பெற்ற வெற்றி எமது ஒரு இலட்சம் படையின் திறமையால் அல்ல; எரித்திரிய மக்கள் கொடுத்த ஆதரவாலேயே'' என்றார். இதேவேளை, இத்தகைய பரப்புரைகட்கு ஈடுகொடுக்க ஈ. பி. எல். எவ். அமைப்பும், 'எரித்திரிய மக்களின் விருப்பை அறிய சருவசன வாக்கெடுப்பு அல்லது பொதுத்தேர்தல் நடத்தவேண்டும்; சருவதேச கண்காணிப்புடன் கூடிய போர் நிறுத்தம்' என, பல அரசியல் கோரிக்கைகளை முன்வைத்ததும் முன்னைய வரலாறு. இறுதியில் எரித்திரிய மக்களின் மனங்களை வெல்ல முடியாததால், 1991ஆம் ஆண்டளவில் விமானமேறி, உயிர் தப்பினால் போதும என மரியம் சிம்பாவேக்குத் தப்பியோடினார். இதுவும் வரலாறு சொல்லும் செய்திகள்தான்.

இப்போது தமிழீழத்திலும் இக் குறுநாவலின் முதலாவது அத்தியாயம் அரங்கேறுகின்றது. இரவோடு இரவாக சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவம் மாறிவிட்டது! குளிரூட்டிய பஸ்வண்டிகள் குறைந்த 'சலாரில்' ஓடுகின்றனவாம்; கப்பல் கப்பலாக உணவுப் பொருட்கள் காங்கேசன் துறைக்குச் செல்கின்றதாம்; மக்கள் மீளக் குடியேற சகல வசதிகளும் செய்யப்படுகின்றனவாம். எப்போதுமே நேரடியாக முனைப்பான போராட்டங்களில் ஈடுபட்டு பட்டறிவு பெறாத எம்மக்கள், கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி, தாம் தேடிய தேட்டங்களை - தமது பரம்பரை வாழிடங்களை - சென்றடைய வேண்டும் என்கின்ற ஒரே நோக்கோடு, வேறு எதுவுமே பற்றிச் சிந்திக்காமல் செயற்படுகின்றார்கள். இப்போது இவர்கட்கு வேறு எதுவும் மனதில் தோனாது - கண்ணில் படாது. ஆனால், உண்மை நிலையென்ன? சிங்கள இராணுவப் பகுதியில் இவர்கட்கு என்ன காத்திருக்கின்றது? புதுவாழ்வா புதைகுழியா? மறுவாழ்வா மரணப் பொறியா? உண்மையிலே 2500 ஆண்டு வரலாறு ஒரு நாளிலே மாறிவிட்டதா? இணக்கமாகப் பேசி எம்மவர்களை ஏமாற்றியவர்கள்-பதவியைக் காட்டித் தன்மானத்தைத் தறித்தவர்கள் - இராணுவத்தை ஏவிவிட்டு அச்சுறுத்தியவர்கள் - இயலாத போது இந்திய இராணுவத்தை ஏவிவிட்டு இளித்தவர்கள் - இப்படியாக ஒவ்வொரு வழிமுறையாகப் பரீட்சித்து எதுவுமே முடியாத போது பெரும் இறுதிப் போரையே திணித்தவர்கள் - அதிலும் ஏமாந்துபோன நிலையில், இப்போது என்ன செய்கின்றார்கள்? இன்னொரு பெரும் போர், இருக்கும் நிலைமைகளை இன்னும் மோசமாக்கி சருவதேசத்தை விழிப்படையச் செய்யும்; பின்விளைவுகளைத் தரும் 'பூமராங்' வளைதடியாக மாறிவிடும் என்கின்ற அச்சத்தில், புது நாடகத்தை - பாரிய இராணுவ அழுத்தப் பின்னணியோடு - அரங்கேற்றுகின்றார்கள். எலிகளை ஓடிப்பிடிக்க முடியாது தளர்ந்துபோன நிலையில், உருத்திராக்கம் தரித்து வேடம் போட்ட 'உருத்திராக்கப் பூனை' நிலையிதல்லவா?

உண்மையில் சிங்கள இராணுவம் இப்போது மாறித்தான்விட்டது. இதுவரை தாம் கையாண்ட ஒடுக்குமுறைகளில் அது இப்போது புதிய மாற்றத்தைக் கொண்டுவரப்போகின்றது; அதற்கான சகல குணக்குறிகளும் இப்போது தென்படுகின்றன. என்ன மாற்றம் என்பதை அறிய, நாம் பொசுனியாவில் நடந்ததைப் பற்றி கிழக்குத் திமோரில் நடப்பது என்ன என்பதைப் பற்றி - அறியத்தான் வேண்டும். பொசுனிய முசுலிம்களை எவ்விதம் இனச்சுத்திகரிப்பு வதைமுகாம்களில் சேர்பியர் வாட்டினர்? போராடக்கூடியவர்களைத் தனியாகப் பிரித்தெடுத்து, வதைமுகாம்களில் அரைகுறைப் பட்டினிபோட்டு எலும்பும் தோலுமாக்கி, எழுந்து நடக்கவே வழியற்றவர்களாக்கவில்லையா? கருத்தரிக்கக்கூடிய பெண்களைக் கருவூட்டல் முகாம்களிலே தங்கச் செய்து, சேர்பியரின் கருக்களைத் தரிக்கச் செய்து, கருக்கலைப்பு செய்ய முடியாத காலம் வரை தடுத்து வைத்து - பின் துரத்தி விடவில்லையா? கிழக்குத் திமோரில் இந்தோனேசிய இராணுவம் என்ன செய்கின்றது? திமோரிய பெண்கள் புதிய திமோரிய சந்ததியை உருவாக்காமல் தடுக்க, கட்டாயக் கருக்கலைப்பு - வெளி ஆட்களைக் கட்டாயமாக மணம் முடிக்கச் செய்தல் - பாலியல் வதைமுகாம்களில் திமோரியப் பெண்களை நிரந்தரமாக அடிமைகளாக்குதல் என்பவற்றைச் செய்யவில்லையா? இலட்சக்கணக்கில் கொன்று குவித்து இன அழிப்பு ஒருபுறம்; மறுபுறமாக, இவ்வாறு திமோரிய குடித்தொகை அதிகரிக்காமல் பார்த்துக்கொள்ளல். இம்முறைமைகளைத்தான் இனிமேல் சிங்கள அரசு பின்பற்றமுடியும். ஏனெனில், இவைதான் மிகுதியாய் இருக்கின்ற சில கொடுமைகள். எம் மக்களை அச்சுறுத்தி எம்பக்கம் வைத்திருப்பதற்காக இவை எழுதப்படவில்லை. நுனிக் கொம்பில் ஏறிய நிலையில் சிங்களம் இருக்கும் போது, 'வருமுன் காவாதான்' நிலைக்குத் தமிழீழம் செல்லக்கூடாது என்பதற்காக, இவை சொல்லப்படுகின்றன. அன்றேல், 'சின்பெயின்' தலைவர் ஜெரி ஆடம்ஸ் கூறியதுபோல், ''ஐ. ஆர். ஏ. அமைப்பினை அழிப்பதானால், இயக்கம் தோன்றியமைக்கான மூல காரணங்களை அழிக்கவேண்டும்.'' இது புலிகளுக்கும் பொருந்தும். எந்த அடக்குமுறைகட்கு எதிராகப் புலிகள் போராடினார்களோ, அவை நீக்கப்படுவதற்கான எவ்வித அறிகுறியுமில்லாத நிலையில் இவை கூறப்படுகின்றன. தமிழீழத்திலே நிரந்தர அமைதி நிலவ, நிரந்தரமாகப் போரை இல்லாது செய்வதற்காகப் புலிகள் போரிடுகின்றனர் என்பதே நாம் வலியுறுத்தும் கரு.

வே. பாலகுமாரன்

புலிகளைப் பொறுத்தவரையில், தமது நீண்ட வரலாற்றில், பல பாரிய பின்னடைவுகளைச் சந்தித்திருக்கிறார்கள். ஒவ்வொரு பின்னடைவின்போதும் முன்னை விட வலிமையோடு நிலைமைகளைச் சரியாகக் கையாண்டு, மேலெழுந்து வந்துள்ளனர்.

இம்முறையும் அது நிகழும்! ○




www.eelamview.com

www.eelamview.com



# ஒரு வருடப் போர்

ஆயுதப் போராட்டம் தீவிரமடைந்த 1983ஆம் ஆண்டிலிருந்து, மூன்றாம் ஈழப்போர் தொடங்கும் (1995 ஏப்ரில்) வரையான 12 வருடப் போரில், 6000 படையினர் பலியானதாகப் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

ஆனால், கடந்த ஒரு வருடப் போரில் மட்டும் இதுவரை 2026 படையினர் பலியாகிவிட்டதாக, பாதுகாப்பு அமைச்சின் உத்தியோகபூர்வ அறிக்கை கூறியுள்ளது (படையினரின் இழப்புக்கள் இதைவிட அதிகம் என நம்பப்படுகிறது).

இதேவேளை, முன்னைய 12 வருடக் கடற்போரில், சிங்களப் படையின் 15 கடற் போர்க்கலங்களை புலிகள் மூழ்கடித்துள்ளனர். ஆனால், கடந்த ஒரு வருடக் கடற்போரில் மட்டும் 9 டற் போர்க்கலங்களைப் புலிகள் மூழ்கடித்துவிட்டனர் இவற்றில் பெரும்பாலானவை மிகவும் சக்திவாய்ந்த சண்டைக்கலங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன், முன்னைய 12 வருடப் போரில் மட்டும் 8 விமானங்களைச் சிங்கள வான்படை இழந்துள்ளது (சீனன்குடா வெடிவிபத்தில் சேதமடைந்த விமானங்கள் இதில் சேர்க்கப்படவில்லை). ஆனால், கடந்த ஒரு வருடப் போரில் மட்டும் 7 வான்கலங்களை அரசின் வான்படை இழந்துவிட்டது.

தமிழர் போராட்டத்திற்குச் சார்பாகக் கடலிலும் - வானிலும் கடந்த ஒரு வருடப் போர் ஏற்படுத்திய தாக்கங்கள், குறைத்து மதிப்பிடமுடியாதவை.

அதேவேளை, ஆள் இழப்பிலும் - ஆயுதத் தளபாட இழப்புகளிலும் கடந்த ஒரு வருடப் போர், சிங்களப் படைத்துறைக்குப் பேரழிவுகளை ஏற்படுத்திய காலப்பகுதியாகவே அமைந்துள்ளது.

இவை ஒருபுறமிருக்க - போரின் இலக்காக சிங்கள அரசின் பொருளாதாரம் குறிவைக்கப்பட்டிருந்ததில் - சந்திரிகா அரசாங்கம் சந்தித்த பொருளாதார நாசங்களும் கடந்த ஒரு வருடப் போரின் முக்கிய அம்சமாக விளங்குகின்றது.

இதற்கு முன்னர் சிங்களப்படை பேரிழப்பைச் சந்தித்த தனியொரு ஆண்டாக, 1992 ஆம் ஆண்டு இருந்துள்ளது. அந்த வருடத்தில் 1400 படையினர் பலியாகயுள்ளனர். 20,000 வரையான படையினர் படையை விட்டோடிய ஒரு காலப்பகுதியாக 1992 விளங்கியதையும் சுட்டிக்காட்டலாம். ஆனால், 1992இல் சிங்களப்படை சந்தித்த உயிரிழப்புக்களுடன், 1995 ஏப்ரிலில் இருந்து 1996 ஏப்ரில் வரையான ஒரு வருட காலத்தில் படையினர் சந்தித்த உயிரிழப்புக்களை ஒப்பிடும்போது, 50 வீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதைக் காணமுடியும். இந்தவகையில், சிங்களப் படைத்துறை இழந்த படைக்கலங்களையும் - அவற்றின் பணப் பெறுமதியையும் எடுத்து நோக்கும்போது, கடந்த ஓராண்டுப் போர் சிங்கள இராணுவ இயந்திரத்திற்குப் பலத்த நாசத்தை ஏற்படுத்தி உள்ளதை, எவரும் மறுக்கமுடியாது.

கடந்த ஓராண்டுப் போரில் சிங்களப்படை ஈட்டிய சாதனையாக குடாநாடு மீதான ஆக்கிரமிப்பு கொள்ளப்படக்கூடும். குடாநாட்டு இழப்பு போராட்டத்திற்கு ஏற்பட்ட ஒரு பின்னடைவு என்பதில் கருத்து வேறுபாடில்லை. ஆனால், நிலங்கள் மீதான கட்டுப்பாட்டை ஒரு விடுதலை இயக்கம் இழப்பதும், பின்னர் மீட்பதும் போராட்ட வரலாற்றில் நடைபெறும் ஒரு பொது இயல்பு என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. இரண்டாம் ஈழப்போரின் இறுதிக் கட்டத்தில், கிழக்கு மாகாணத்தின் பெரும்பகுதி நிலம் சிங்களப்படையின் ஆக்கிரமிப்பிற்குள் இருந்தது. ஆனால், கடந்த ஓராண்டுப் போரில் அவற்றில் பெரும்பகுதி நிலம், புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளது. அதுபோல, கடந்த 11 வருடகாலமாகப் புலிகளின் கட்டுப்பாடடிற்குள் இருந்த யாழ். குடாநாட்டை, இப்போது படையினர் கைப்பற்றி உள்ளனர். தமிழர் நிலங்களை விடுவித்து- பாதுகாத்தல் என்பது, மரபுவழிப் போர்முறையில் புலிகள் இயக்கம் பெறும் வளர்ச்சிகளைப் பொறுத்தது. மரபுவழிப் போர்முறைக்கு ஆட்பலமும் - அதற்கே உரித்தான ஆயுத வகைகளும் தேவை. இந்த இரண்டும் புலிகள் இயக்கத்திடம் போதுமான அளவிற்கு வந்துசேரும் போது எமது நிலங்கள் விடுவிக்கப்படும் என்பதே, போராட்ட யதார்த்தமாகும்! ○

# மனந்திறந்து பேசுகின்றார் மண்டேலா

தென்னாபிரிக்காவின் முன்னைய ஆட்சியாளர்களான வெள்ளை இனவெறி அரசால் மண்டேலா 27 வருடங்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். 11. 2. 90 அன்று, உலகின் நிர்ப்பந்தங்களுக்கு இணங்க அவர் விடுதலை செய்யப்பட்டார். 94 ஏப்ரிலில் நடந்த தேர்தலில், மண்டேலா தென்னாபிரிக்காவின் ஜனாதிபதியானார்.

தனது 27 வருட சிறை வாழ்வில் 18 வருடங்களை ஒரே சிறையில் அவர் கழித்திருந்தார். 'ரொபின் தீவு' என்றழைக்கப்படும் அந்தச் சிறைச்சாலையில் இருந்தே இறுதியாக அவர் விடுவிக்கப்பட்டிருந்தார். தனது விடுதலையின் ஆறாவது வருடத்தைக் குறிக்குமுகமாக ரொபின் தீவு சிறைச்சாலைக்கு மண்டேலா சென்றார். தென்னாபிரிக்காவுக்கு வருகை தந்திருந்த நோர்வேப் பிரதமரையும் அழைத்துக் கொண்டு மண்டேலா அங்கே சென்றார்.



உருக்கினால் செய்யப்பட்ட பாரிய கதவைத் திறந்துகொண்டு சிறையின் உள்ளே நுழைந்த போது, "மகிழ்ச்சியானதும் துக்ககரமானதுமான பழைய நினைவுகள் மனதில் எழுகின்றன" என்று கூறிய மண்டேலா, "நினைத்து நினைத்து மகிழக்கூடியவையும் அதில் உள்ளன - மறந்து விடவேண்டியனவும் அதில் உள்ளன" என்றார்.

சிறைச்சாலைக்குள் நடந்த சிறிய கூட்டத்தில் உரையாற்றும்போது, "நாங்கள் (கறுப்பின மக்கள்) தனித்துவிடப்பட்டிருந்த அந்தக் காலத்தில் எங்களது மிகப்பெரிய நண்பனாக இருந்தது நோர்வே நாடுதான்" என்றார். அந்தச் சிறைச்சாலை நிகழ்ச்சிக்கு நோர்வேப் பிரதமரையும் அவர் அழைத்துச் சென்றது, நோர்வே நாட்டைக் கௌரவித்து - போராட்ட காலத்தில் அது செய்த உதவிகளுக்கு நன்றி தெரிவிக்கவே என்று, பின்னர் உலகம் புரிந்துகொண்டது.

ஆபிரிக்க தேசிய கொங்கிரஸ் என்ற விடுதலை அமைபபை உருவாக்கி அதன் தலைவராக இருந்து செயற்பட்டபோதே - தேசத்துரோகக் குற்றச்சாட்டின்பேரில், மண்டேலா, வெள்ளை இனவெறி அரசால் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார் இவர் சிறையில் இருந்த போதும் கறுப்பின மக்களின் சுதந்திரப் போர் நடந்துகொண்டே இருந்தது. அந்த விடுதலைப் போருக்கு உலகின் பல நாடுகள் மறைமுகமாக பல்வேறு உதவிகளையும் வழங்கிவந்தன. கறுப்பின மக்களின் விடுதலைக்காக ஆ. தே. கொங்கிரஸ் போராடியபோது அதற்கு உறுதுணையாக நின்ற நாடுகளை - இதுவரை காலமும் - மண்டேலா பகிரங்கமாக உலகிற்கு அறிவிக்கவில்லை. ஆனால், 'ரொபின் தீவு' நிகழ்ச்சியை அதற்குரிய சந்தர்ப்பமாக அவர் பயன்படுத்தினார்.

## செய்தி நயம்

"தென்னாபிரிக்காவுக்கு வருகைதரும்படி ஃபிடல் கஸ்ரோவை அழைத்துள்ளேன்" என்று அறிவித்த மண்டேலா, "கேணல் கடாபியையும் அழைக்க முடிவு செய்துள்ளேன்" என்று முரசறைந்தார். அவர்மேலும் அங்கேஉரையாற்றுகையில், "நாங்கள் தனிமையில் இருந்தபோது எங்களது நண்பர்களாக இருந்தவர்கள் அவர்கள்" என்று நன்றி உணர்வுடன் கூறினார். "எமது நண்பர்களாக யார் யார் இருக்கவேண்டும் என்று மற்றவர்கள் கூறும் ஆலோசனைகளை நான் செவிமடுக்கமாட்டேன்" இவ்வாறு, 77 வயதான நெல்சன் மண்டேலா உணர்ச்சி ததும்ப, அங்கே உரையாற்றினார். "மேற்கு நாடுகளின் எதிரிகள் எங்களது எதிரிகள் அல்ல" என்று, 18 வருடங்களாக தான் வாழ்ந்த அந்த வீட்டில் (சிறைக் கூடம்) வைத்து, மண்டேலா கொள்கைப் பிரகடனம் செய்தார்.

அந்த அரசியல் பிரகடன நிகழ்ச்சியில் வைத்து, தனது சிறைவாழ்வின் மறக்கமுடியாத அனுபவங்களையும் மண்டேலா மீட்டினார். ஒருமுறை எலி ஒன்று, சிறை முற்றத்தில் விழுந்து கிடந்த ஒருசில தானியங்களைப் பொறுக்கச் செல்லவேண்டிய துணிவைப் பெறுவதற்காக எடுத்த முயற்சிகளை - தனது அறையில் இருந்தவாறு - கண்குளிரப் பார்த்து மகிழ்ந்ததாக அவர் நினைவுகூர்ந்தார்.

"கியூபாவுடனும் - கடாபியுடனுமான உறவுகளைத் துண்டித்துவிடும்படி உலகின் முன்னணி நாடொன்றின் தலைவர் என்னிடம் சொன்னார்" என, மண்டேலா வெளிப்படுத்தினார் அத்துடன், "உலகத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தலைவராக நீ இருக்க விரும்பினால், கியூபாவையும் கடாபியையும வெறுத்தொதுக்கு" என, தனது மேலைநாட்டு நண்பர்கள் ஆலோசனை கூறியிருந்ததாகவும் - மண்டேலா - தெரிவித்தார்.

"நீங்கள் (மேற்கு நாடுகள்) அவர்களை (கஸ்ரோ - கடாபி) எவ்வளவுதான் வெறுத்தொதுக்கினாலும், நாங்கள் எங்களது நண்பர்களைக் கைவிடமாட்டோம்" என, சிறைச் சுவர்களுக்கு உள்ளே நின்றவாறு - மண்டேலா - முழங்கினார்.

தற்போதைய தென்னாபிரிக்காவின் நட்பு நாடுகளாக லிபியா கியூபா - ஈரான் விளங்குகின்றன; இவை அமெரிக்க எதிர்ப்பு நாடுகள் என்பது குறிப்பிடத்தக்கது கடந்த ஒக்ரோபர் மாதம் கியூபா மீது அமெரிக்கா பொருளாதாரத் தடையை விதித்தபோது, "பனிப்போர்க் காலத்திற்கு திரும்பவேண்டும் என்ற (அமெரிக்காவின்) ஆசையை தென்னாபிரிக்கா நிராகரிக்கின்றது" என்று கூறி அமெரிக்காவைச் சாடினார்.

சிறைவாழ்வின்போது தனது கண்பார்வையை மங்கச் செய்த கல்குவாறி வேலைத்தளத்தைச் சென்று பார்த்தபோது, மேற்கு நாடுகளைக் கண்டனம் செய்யும் வகையில், "நிறவெறிக் கொள்கைக்கு எதிரான ஆ.தே. கொங்கிரசின் போராட்டம் மீளப்பெறப்படமாட்டாது" எனச் சூளுரைத்தார். வெள்ளையர் ஆட்சியில் இடம்பெற்ற கொடுமைகளை அம்பலப்படுத்த அல்லது அதற்குக் காரணமானவர்களை தண்டிக்க மண்டேலா அரசு எடுக்கும் முயற்சிகளை மேற்கு நாட்டு அரசுகள் விரும்பவில்லை. அத்துடன், நிறவெறி ஆட்சியின் எச்சசொச்சங்களைப் பூண்டோடு துடைத்தெறிய முனையும் மண்டேலாவின் முயற்சியையும் மேற்கு உலகம் ஊக்குவிக்கவில்லை.

இந்த சிறைச்சாலை நிகழ்ச்சிமூலம் தனது பழைய நண்பர்களுக்கு நன்றிக்கடன் செலுத்திய மண்டேலா அவர்கள், அமெரிக்காவையும் அதன் கூட்டாளி நாடுகளையும் ஒருவகையில் கண்டன விமர்சனம் செய்வதிலும் செலவிட்டார். தென்னாபிரிக்காவின் பொருளாதார அபிவிருத்திக்காக மேற்கு நாடுகளுடனான ராஜதந்திர உறவுகளைப் பேணிப்பாதுகாக்க மண்டேலா முயன்றாலுங்கூட, தனதுமனச்சாட்சியை இந்த நிகழ்ச்சிமூலம் உலகிற்குக் காட்டியுள்ளார். நெருக்கடியான ஒரு காலகட்டத்தில், தனது இயக்கத்திற்கு - தனது போராட்டத்திற்கு - தனது மக்களிற்கு உதவிபுரிந்த நாடுகளை, அதன் தலைவர்களை, தான் வாழும்போதே கௌரவிக்க மண்டேலா விரும்பி உள்ளதையே 'ரொபின் தீவு' பேச்சு கோடிகாட்டுகின்றது.

இந்த வருடத்துடன் (1996) 'ரொபின் தீவு' சிறைச்சாலை மூடப்படவிருக்கின்றது இனிமேல் அது நிறவெறி ஆட்சிக்கால அருங்காட்சியகமாக விளங்கப்போவதாக, தென்னாபிரிக்க அரசு அறிவித்துள்ளது. 18 வருடகாலமாக மண்டேலா வசித்த சிறைஅறை மற்றும் கட்டாயவேலையில் ஈடுபடுத்தப்பட்ட கருங்கல் குவாறி ஆகிய முக்கிய பகுதிகள் பேணிப் பாதுகாக்கப்படவிருக்கின்றன. ○

# சிறீமாவோ அம்மையாருக்கு 80 ஆவது பிறந்தநாள்

சிங்கள இராணுவத்தின் அடக்குமுறை வரலாற்றைப்பொறுத்தவரை 1961 ஆம் ஆண்டு, முக்கிய இடத்தை வகிக்கின்றது. தமிழ் மக்கள் மீது சிங்கள இராணுவத்தை அரசாங்கம் ஏவிவிட்ட முதல் வரலாறறு நிகழ்ச்சி, இந்த ஆண்டே இடம்பெற்றது. சிங்களத்தை அரச மொழியாக இலங்கை முழுவதும் நடைமுறைப்படுத்துவதை எதிர்த்து, யாழ்ப்பாணக் கச்சேரிக்கு முன்னால் தமிழ் மக்கள் நடாத்திய சத்தியாக்கிரகப் போராட்டத்தை முறியடிக்க, அன்றைய அரசாங்கம் இராணுவத்தைப் பயன்படுத்தியது சாத்வீக வழியில் தமிழ் மக்கள் நடாத்திய அரசியல் போராட்டத்திற்குப் பதிலடியாக அரசாங்கத்தின் உத்தரவின்பேரில் இராணுவ வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்ட முதல் சம்பவம் இதுவாகும்.

அப்போது ஆட்சிபீடத்தில் இருந்தவர் சிறீமாவோ பண்டாரநாயக்கா. இந்தவகையில் தமிழினம் மீதான இன்றைய இராணுவ பயங்கரவாதத்திற்கு முன்னோடியாக சிறீமாவோ அம்மையாரே இருந்துள்ளார்.

இதேவேளை, 1972 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சிறீலங்காவின் புதிய அரசியல் அமைப்புச் சட்டம், தமிழ் இனத்தை அடக்கி ஆளும் நோக்குடன் வரையப்பட்ட ஒரு பேரினவாதச் சட்டம் என்பது வரலாற்று ஆசிரியர்களின் தீர்ப்பாகும். அரசியல் அமைப்பு வாயிலாக அதுவரை தமிழினத்திற்கு இருந்த ஒரு சட்டப் பாதுகாப்பை (29 ஆம் பிரிவை), புதிய அரசியல் அமைப்பு நீக்கியமை குறிப்பிடத்தக்கது. அத்துடன், மதசார்பற்றதாக இருந்த இலங்கையின் பழைய அரசியல் அமைப்பை மாற்றி, பௌத்த மதத்தை அரச மதமாக்கும் பிரகடனம் புதிய அரசியல் அமைப்புச் சட்டம்

→

www.eelamview.com

www.eelamview.com



மூலம் செய்யப்பட்டது. மேலும், 'தரப்படுத்தல்' என்ற பெயரில் தமிழ் மாணவர்களின் உயர்கல்வியைத் திட்டமிட்டு அழிக்கமுயன்ற அம்மையாரின் செயலையும் தமிழினம் என்றும் மறக்காது. இந்த வகையில், சிறிமாவோ அம்மையாரின் ஆட்சியிலேயே இந்த இன - மத வெறிச்சட்டங்கள் இயற்றப்பட்டன.

சிங்கள மொழி மட்டும் சட்டம் மற்றும் வாகன இலக்கத்தகடுகளில் சிங்கள 'சிறீ' எழுத்தைப் பொறிக்கும் சட்டம் என்பவற்றை, சிறீமாவோவின் கணவர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா பிரகடனப்படுத்திய பின்னர், அவரின் இனவாதப் பாதையில் மேலும் ஒருபடி



முன்னேறிய சிறீமாவோ அம்மையார், சிங்கள - பௌத்த பேரினவாத சித்தாந்தத்திற்கு அரசியல் யாப்பு ரீதியாகச் சட்டவடிவம் கொடுத்து - அரசின் கொள்கையாக - நிலைநாட்டினார்.

அத்துடன், 1974 ஆம் ஆண்டு யாழ்நகரில் நடந்த 'உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு'ப் படுகொலைகளுக்கும் சிறீமாவோ அம்மையாரே காரணமாக இருந்துள்ளார். இவரது ஆட்சிக் காலத்திலேயே தமிழினத்தின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் பிறந்தது. அந்த அளவுக்கு, இனவெறி ஆட்சியை இவர் நடாத்தி இருந்தார். அன்றைய தீவிரவாத தமிழ் இளைஞர்களின் ஆயுத எழுச்சியை ஒடுக்கும் ஒரு புலனாய்வுப் படையாக, சிறீலங்கா சுதந்திரக் கட்சி அலுவலகங்களையும் - தொகுதி அமைப்பாளர்களையும் சிறீமாவோவின் அரசாங்கம் பயன்படுத்தியது. இந்த வகையில் நோக்கினால், தமிழினத்தின் விடுதலை எழுச்சிக்கு எதிராகத் தமிழர்களையே (சு. க. அமைப்பாளர்கள்) பயன்படுத்திய நயவஞ்சக நடைமுறையையும், சிறீமாவோ அம்மையாரே நவீன அரசியலில் தொடக்கிவைத்தார் என்றால் அது மிகையாகாது.

சிறீலங்காவின் ஆட்சிபீடத்தில் சிறீமாவோ இரண்டு தடவைகள் இருந்துள்ளார். அந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் தமிழ் இனத்திற்கு அவர் விளைவித்த தீங்குகள் கொஞ்சநஞ்சமல்ல. இன்று அவரது மகள் தமிழினத்திற்குச் செய்யும் அழிவுகளுக்கும் அநியாயங்களுக்கும், தந்தை - தாய் வழிவந்த ஒரு குடும்பப் பாரம்பரியம் அடித்தளமாக இருப்பதை, எவரும் மறுக்க முடியாது! ○

# சருவதேச அரசியலில் பயங்கரவாதம் படும் பாடு!

உலகிலுள்ள நாடுகளின் வெளிநாட்டமைச்சர்களுக்கு எத்தனையோ பணிகள் இருக்கும். ஆனால் சிறீலங்காவின் வெளிநாட்டமைச்சர், மானிப்பாய் கதிர்காமருக்கோ முழுநேரப்பணி, உலகில் எந்த மூலையில் குண்டு வெடித்தாலும் மறுகணமே, தயாராக வைத்திருக்கும் கண்டன அறிக்கையில் சம்பந்தப்பட்ட நாட்டின் பெயரை நிரப்பி அறிக்கை விடுவதுதான் என்றாகிவிட்டது அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக, உலகில் பயங்கரவாதத்தை அழிக்க சிறீலங்கா இப்போது வரிந்துகட்டிக்கொண்டு களத்தில் இறங்கிவிட்டது. எனவே, தமது 17 மாத பொறுமையான போர் நிறுத்தத்தை ஐ. ஆர். ஏ. எனப்படும் ஐரிசு குடியரசு இராணுவம் முடிவிற்குக் கொண்டு வந்து - இலண்டன் மாநகரின் மத்தியிலே பெரிய குண்டொன்றை வெடிக்கவைத்தபோதும், இசுலாமிய கமாஸ் அமைப்பு இசுரேலின் மத்தியிலே பேருந்துக் குண்டு வெடிப்புக்களை நிகழ்த்தியபோதும், பின்னர் அல் ஜீரியா - டஹ்ரேன் எனத் தொடர்ந்த குண்டு வெடிப்புக்களின்போது தனித்தனியாகவும் பின்னர் எல்லாவற்றையும் தொகுத்தும் அறிக்கையாக கதிர்காமர் வெளியிட்டார். இப்போது, அடுத்த குண்டு வெடிப்பிற்காக அறிக்கை விடத் தயாராகின்றார். அண்மையில் புதுதில்லியில் விருந்தினர் விடுதியொன்றில் குண்டு வெடித்து, அதன் மூன்று மாடிகளும் தரைமட்டமாகியமை கதிர்காமருக்கு வாய்ப்பாகிவிட்டது.

''எங்கள் நாட்டிலும் உங்கள் நாட்டிலும் பயங்கரவாதிகள் குண்டுகளை வெடிக்கவைக்கின்றார்கள். கூட்டாக நாம் சேர்ந்து நடவடிக்கை எடுப்போம்; பயங்கரவாதிகட்கு நிதி போகாமல், ஆயுதங்கள் சேராமல் தடுப்போம்; உலகிலிருந்தே பயங்கரவாதத்தை அழிப்போம்'' என்று அறிக்கைகள் விட்டு, சர்வதேச தலைநகர்களில் இலக்கண சுத்தம் மிக்க ஆங்கிலத்தில் பேசிய பின், ''சர்வதேச பயங்கரவாதம்'' என்கிற சாட்டில் புலிகளைப் பலவீனப்படுத்தலாம் - வெளிநாட்டு அலுவலகங்களை மூடவைத்துவிடலாம் என, கதிர்காமர் கனவு காண்கின்றார். ஏதோ சர்வதேசம் தங்கள் பின்னால் நிற்பது போன்ற தோற்றம் சிங்களவனுக்கு உருவாகுவதைத் தவிர, இவற்றால் வேறு ஏதும் பயனில்லை என்பது கதிர்காமருக்குத் தெரிய நியாயம் இல்லை. ஏனென்றால், கொடிய அடக்குமுறைகட்கு எதிராகப் போராடும் மக்களும் போராளிகளும் சிந்தும் குருதியின் நிறத்தைத்தன்னும் கதிர்காமர் அறிவாரா? அல்லது உலக அரசியலில் காலத்திற்குக் காலம், வெவ்வேறு தேவைகட்காக, ''பயங்கரவாதம்'' என்கிற தொடர் பல்வேறு தரப்புக்களாலும் பல்வேறு வகைகளில் பயன்படுத்தப்படுவதுபற்றித்தன்னும் அவர் அறிவாரா?

அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் விடுதலைப் புலிகட்கு நிதி சேர்வதைத் தடுப்பதற்காக இத்தனை பாடுபடும் இவருக்கு, வட அயர்லாந்தின் கதை தெரியாமல் இருக்க முடியாது.

இங்கிலாந்தோடு வட அயர்லாந்தை இணைக்க விரும்பும் மத இணைப்பாளர் மேலாண்மைக்கு எதிராக – கத்தோலிக்க மக்களின் தன்னாட்சியுரிமைக்காக - 25 வருடமாகப் போராடி வரும் ஐ. ஆர். ஏ. அமைப்பினரின் தொடர்ந்த குண்டு வெடிப்புக்களால் பொருண்மியம் நலிவடைந்த நிலையில், ஒரு வருட காலத்திற்கு மேலாக, பிரித்தானிய யோண் மேஜரின் அரசு ஐ. ஆர். ஏயோடு இரகசியமாகப் பேசிப் போர் நிறுத்தம் கொண்டுவந்த கதை முன்னையது. போர் நிறுத்தத்தின் தொடக்கத்தில் காட்டிய அக்கறையை - அமைதித் தீர்விற்கான பேச்சுக்களில் காட்டிய ஆர்வத்தை - மேஜர் பின்னர் படிப்படியாக இழக்கலானார். இதற்கு அவரது பழைமை பேண் கட்சி மிகவும் பலவீனப்பட்டு நாடாளுமன்ற உறுப்பினர் பலர் விலகிய பின், 'வட அயர்லாந்து புரட்டத்தாந்து இணைப்பாளர் (Unionist) கட்சி'யின் நாடாளுமன்ற உறுப்பினர் சிலரின் ஆதரவை நம்பிக் காலந்தள்ள நேரிட்டமையே காரணம். இதனால், ஐ. ஆர். ஏ. அமைப்பு பொறுமையிழந்து போர் நிறுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவர குண்டுகள் வெடிக்க- பயங்கரவாதப் படுகொலையாளர் என மேஜர் பட்டம் சூட்டி அலற சந்திரிகா அம்மையார் முதல் கண்டன அறிக்கையை மேஜருக்கு அனுப்ப- இவ்வாறு கதை நீண்டது. இங்குள்ள முக்கிய செய்தி என்னவென்றால் ஐ. ஆர் ஏ. அமைப்பு தனக்கான நிதியை -ஆயுதத்தை - பெற அமெரிக்காவில் முன்னர் சென்று குடியேறிய ஐரிசு மக்களின் மிகத் தாராளமான உதவியே காரணம் என்பதால், அதைத் தடுக்குமாறு கிளின்டனை மேஜர் எவ்வளவோ வற்புறுத்தினார். இக்கோரிக்கை இன்னமும் கவனத்திற்கு எடுக்கப்படவே இல்லை. இதற்கு கிளின்டனின் முக்கிய ஆதரவாளராக இருக்கும் செனட்டர் சிலர் ஐரிசு விடுதலைப் போராட்டத்திற்கும் ஆதரவாளர் என்பதும், வருட முடிவில் வரவிருக்கும் சனாதிபதித் தேர்தலை எதிர்நோக்கும் கிளின்டன், பயங்கரவாதத்தை ஒழிப்பதைவிட பதவியே முக்கியம் எனச் செயற்படுவார் என்பதும் அரசியல் அரிச்சுவடி அல்லவா? இது ஒரு பக்கக் கதை.

மறுபக்கக் கதை, இசுரவேல் பிரதமர் சிமோன் பெரகக்கு ''இசுலாமிய பயங்கரவாதத்தை'' அழிக்க முழுமையான உதவிகளைக் கிளின்டன் அளிப்பது பற்றியமையாகும். பாலஸ்தீனிய காசாப் பகுதி கமாஸ் அமைப்பையும், தென் லெபனானில் நிலைகொண்டுள்ள கிஸ்புல்லாவையும் ''பயங்கரவாதிகள்'' என்று கிளின்டன் கரித்துக் கொட்டுவதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. அமெரிக்காவின் பொருண்மிய - தொடர்பு சாதன துறைகளில் ஆதிக்கம் செலுத்தும் யூதரின் ஆதரவை இழக்கமுடியாமை ஒரு காரணம். வரும் மே மாதமளவில் இசுரேலில் நடைபெறப்போகும் பொதுத்தேர்தலில், பாலஸ்தீனிய - இசுரேலிய உடன்பாட்டிற்கு ஆப்பு வைக்கப்போவதாகக் கூறும் 'லிக்குவிட்' கட்சித் தலைவர் பென்சமின் நேத்தான்யு பெரு வெற்றியடையும் வாய்ப்பிருப்பதால், சிமோன் பெரசை மட்டுமன்றி தனது அமைதி உடன்பாட்டையும் காப்பாற்றவேண்டிய நிலையில் அமெரிக்கா இன்று இருக்கின்றது என்பது, மறு காரணம்.

இவை எல்லாம் கதிர்காமருக்குத் தெரியாமல் இருக்கும் என எவராலும் நம்ப முடியாது. ஏனென்றால், பாலஸ்தீனியருக்கும் யூதருக்கும் இடையிலான பகைமைத் தீ உச்சம் பெற்று கொழுந்துவிட்டெரியும் நிலையும், மதத் தீவிரவாதம் இருபகுதியிலும் மேலோங்கி பெரும் பூகம்பம் ஒன்று வெடிப்பதற்கு முன்னாலான நிலையுமே இப்பகுதியில் நிலவுவதாக ஆய்வாளர் கூறுகின்றனர். இப் பூகம்பம் யூத - பாலஸ்தீனிய உள்நாட்டுப் போராக, யூதரும் - பாலஸ்தீனியரும் தமக்கிடையே மோதும் கலகங்களாக உருவெடுக்கும் என்பதும் இவர்கள் கருத்து. அது இன்று உண்மையாகி வருவதும் கண்கூடு. பாலஸ்தீனியரோ, ''அவர்கள் (யூதர்) எங்களைத் தாக்கமுன் தாக்குங்கள்; கொல்லமுன் கொல்லுங்கள்'' என்றும், ''அரபுக்களைக் கொல்லுவதன்மூலமே யூதர் புனிதம் அடைகின்றனர்; கடவுளின் மகிமையை மேலோங்கச் செய்கின்றனர்; இறைதூதன் வரும் காலத்தை விரைவுபடுத்துகின்றனர்'' என, யூதமதத் தீவிரவாதிகளும் கூறும் யதார்த்த நிலையே அங்குள்ளது. இசுலாமிய தரப்பில் ககேன் (kahane). கச் (kach) எனப் பல தீவிரவாத மத அமைப்புகள் இயங்குவது ஒன்றும் தெரியாத கதையல்ல. 1990ஆம் ஆண்டு நியூயோர்க்கில், ◌வத்து, இசுலாமிய தீவிரவாதிகளால் கொல்லப்பட்ட யூத தீவிரவாத தலைவனான ராபி மெயர் ககேன் பெயரில் இயங்கும், 'ககேன் வாழ்கின்றார்' (kahane lives) என்கிற அமைப்பின் விசுவாசியே, சில காலத்துக்கு முன் 'கெப்ரோனின்' பள்ளிவாசலில் வேட்டுக்களைத் தீர்த்து, எட்டு நிமிடத்துக்குள் 30 பாலஸ்தீனியரைக் கொன்றதும்; அண்மையில் இசுரேலியப் பிரதமர் ஜிட்சாக் றபீனைக் கொன்றவர் இத்தகைய அமைப்பினைச் சேர்ந்தவரே என்பதும் கூறும் செய்திகள், விரிவானவை அல்லவா? இவை எல்லாம் எழுப்பும் கேள்விகள் 'பயங்கரவாதம் என்றால் என்ன ?' என்பதுதான். கமாசுக்கும் யூத மத தீவிரவாத அமைப்புகளுக்கும் இன்றுவரை அமெரிக்காவில் இருந்தே பெருமளவு நிதி போவதையும், ஆப்கானிஸ்தான் போராட்ட காலத்தில் இசுலாமிய மத அடிப்படைவாதத்தை அமெரிக்காவும் பயன்படுத்தியது என்பதும், அதன் பயனையே இன்று அமெரிக்கா அனுபவிக்கின்றது என்பதும் வேறு விரிவான கதை.

எனவே, கடந்த மார்ச் மாதம் கமாஸ் அமைப்பின் பயங்கரவாதத்தை அழிக்க என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி, அமெரிக்காவின் முகதாவில், எகிப்தின் செங்கடல் ஓய்வு நகரமான 'சரம் - அல் - செய்க்'கில் 30 நாடுகள் கூடியபோது, இதுபற்றி கதிர்காமரைத் தவிர வேறு எவரும் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. பி. பி. சியே கூறியது போல், வெறுப்பாலும் விரக்தியாலும் வறுமையாலும் வன்மத்தாலும் வாட்டப்படும் காசாப் பகுதி அடிமட்ட பாலஸ்தீனியர் வாழ்வோடு பின்னிப்பிணைந்த இயக்கம் கமாஸ். இதனை அழிக்க வெளிநாடுகளில் மாநாடு கூட்டி என்ன பயன்? இம்மாநாட்டைக் கண்டித்து சிரியாவின் வெளிநாட்டு அமைச்சர் வெளியிட்ட அறிக்கையே கதிர்காமர் போன்றோருக்குத் தக்க பதிலாகின்றது. ''ஆக்கிரமிப்புக்கு எதிராக நடாத்தப்படும் நீதியான - முறையான - போராட்டங்களைப் பயங்கரவாதச் செயல்களோடு போட்டுக் குழப்பிக்கொள்ளக் கூடாது. இசுரேலிய பயங்கரவாதங்களை - படுகொலைகளை - மேற்குலகம் மறக்கக்கூடாது. ஏனெனில், மத்திய கிழக்கில் இன்று நிலவும் வன்முறைகட்கு இதுவே அடிப்படை. இன்று உலகம் முழுவதுமே பயங்கரவாதச் செயல்கள் எனக் கூறப்படுபவை நடக்கின்றன; ஏன், இங்கிலாந்திலும் அமெரிக்காவிலுங்கூட நடைபெறுகின்றன. இங்கெல்லாம் பயங்கரவாத ஒழிப்பு மாநாடுகளா நடத்தப்படுகின்றன?'' எனக் கேள்வி எழுப்பிய சிரிய வெளிநாட்டு அமைச்சர், ''பயங்கரவாதம் என்றால் என்ன? இது இன்று ஒரு சருவதேச பரிமாணம் பெற்ற தோற்றப்பாடு. பாரிய சிக்கல் ஒன்று இருப்பதை அது பிரதிபலிக்கின்றது; அத்தோடு அமைதி முறைமைகள் அங்கு முறிவடைந்து போய்விட்டதையும் குறிக்கின்றது. எனவே, சருவதேச மாநாடுகளைக் கூட்டித் தீர்மானங்கள் எடுத்து என்ன பயன்? இந்தச் சிக்கலுக்குக் காரணமான - சம்பந்தப்பட்ட மக்களின் உண்மையான மனவுணர்வினைக் கணக்கில் எடுக்காத இத்தகைய முயற்சியில் ஈடுபடுவோர், பேரொளி ஒன்றின் முன்னே குருடாகிப் போனவர்'' எனச் சினமுடன் கூறினார். சிரியா, மேற்குலகம் விரும்புவது போல் செயற்படுவதானால் பாலஸ்தீனியரையே முழுமையாக அழிக்கவேண்டுமென்பதை, அது கேலியாகக் கூறிநிற்கின்றது.

இது கதிர்காமருக்கு மிகப் பொருத்தமான பதிலல்லவா? ○

www.eelamview.com

www.eelamview.com



# வாழ்வதெனில் மனிதர்களாக...
# அதுவும் தமிழர்களாக...
# அல்லது கல்லறைகளாக...

இடைவெளியற்று இடிவிழுகிறது எமக்கு.
அவலம் அன்றாட வாழ்வாச்சு.
கறிக்கு உப்பானது கண்ணீர்
நாசித்துவாரங்கள் காற்றையல்ல
கந்தகத் தூசியையே சுவாசிக்கின்றன.
அடுத்தநேர உணவு எந்த அகதிமுகாமில் ?
யாரறிவார் ?
குடாநீரேரியின் அக்கரையிலும், இக்கரையிலும்
துண்டாடப்பட்டன உறவுகள்.
தெருவிற் காணும்போது சிறிய உசாவலுடன்
சொந்தங்கள் சுருங்கிப் போயின.
நேற்றுக் கும்பிட்டெழுந்த காலைப்பொழுதின்
ஆனந்தம் அற்றுப்போக
இன்று ஏன்விடிகின்றது என்று எரிச்சல்.
ஈழத்தமிழன் பாவத்தமிழனாகி விட்டானா ?
வேர்பிடித்த துளசிச் செடியாக இருந்தோர்
வாரறுந்த செருப்பாகிப் போனார்.
கிழிந்துபோன பொலித்தீன் பையாக
தேடுவாரற்று வீதியிற்தமிழன்.
விடும் ஒவ்வொரு பெருமூச்சும்
வீட்டின் சுவரை இடிக்க
தூக்கம் தொலைந்து போனது.
விழிகளை இறுகமூடினாலும்
யாரோ தட்டியெழுப்பி
''வாரான்கள்'' என்பதுபோல நடுக்கம்.
போதுமடா சாமி.
இனிப் பொறுக்க முடியாது.
சொல் பகையே !
எம்மீது
இன்னுமெத்தனை வதை சுமத்துவாய் ?
உன்னோடு ஒன்றான வாழ்வினி
எப்போதும் இல்லையெனச் சொல்லி
ஊர்பிரிந்து வந்தோம்.
உனக்கடிமை ஆகோமென்று
எழுதிவைத்து விட்டுத்தானே
செம்மணி கடந்தோம்.
ஆயுதபலத்தால் அடக்கி விடலாமென்றா
கணக்குப் போட்டீர் ?
வெட்கம் கெட்டவர்களே !
விடிகாலை விழிதிறந்தபோது
முற்றத்தில் நின்றாயாம் நீ
கோவிலுக்குக் கும்பிடப் போனால்
தேரடியில் நின்றாயாம்.
எப்படி வந்தாய் என்பதல்லக் கேள்வி




– வியாசன்

ஏன் வந்தாய் என்பதற்கே பதில்வேண்டும்.
சிலந்திவலைக்குள் சிக்குண்ட பூச்சியாய்
நெருப்பு வலயத்துள்ளே
எமமுறவுகள் இறுகிக் கொண்டன.
திசைக் கதவம் அனைத்திலும் பூட்டு.
உடைத்துத் திறக்க முடியாது
உள்ளே சொந்தங்கள் உறைந்துவிட்டன.
எஞ்சியோர் எதுவும் எடுக்காது
கிளாலிக்கரைக்கு ஓடிவந்தனர்.
அலையெது, தலையெது என்றறியாது
கரையெங்கும் உறவுகள் திரண்டன.
இருந்தது ஒருவழி
அதுவும் கடல்வழி
ஓடிவந்து மூச்சை ஆசுவாசப் படுத்தமுன்னர்
வந்து விழுந்தன எறிகணைகள்
அடுத்தஇடி எவர்தலையில் என்று
கணக்குப் பார்த்தபடி கதறியது
கிளாலிக்கரை.
தென்னைமரத் தோப்பிலிருந்து எழுந்த அவலக்குரல்
முகிலைக் கலைத்தது.
இம்முறை எம்மைவிட்டு ஓடிப்போக முடியுமா ?
என்பதான வழிமறிப்பு.
ஆயுதபலத்தின் ஆணவம்.
படகேறிய தமிழர்கள் மீதும்
ஹெலிமீதிருந்து சூடு.
துவம்சம்.
கோரப்பற்களில் குருதி வழிய நடந்த
நரபலி வேட்டை
நீரேரிமுழுதும் இரத்த நிறமாச்சு.

பின்னால் கலைத்தும்
முன்னால் மறித்தும்
உறவைச் சிறை பிடித்தாய்.
பின்னர் இவர்களைத்தான்
சின்னத் திரையில் காட்டி,
புலிகளின் உறவுதறி வந்த தமிழரென்று
பிரசாரம் செய்கின்றாய்.
இல்லை...
விபசாரம் செய்கின்றாய்.
பொய் சொல்லத்தானா தொலைக்காட்சி?
வாய்மையற்றுப் போனதா வானொலி?
குரூரத்தின் கொடுமுடி இது.
மகளும், தாயும், மாமனும், தளுவத்தவும் சேர்ந்து
அழகிய எம்வாழ்வை அழித்தீர்.
பழிகமந்திர்.
புலிகளின் கணக்குப் பொய்க்காது.
ஏதுமறியாத அப்பாவிகளை இம்சித்தபடி
கொன்று குவித்தபடி
சிங்களக் கொடியேற்றி வைப்பது
உங்கள் அகராதியில் '' வெற்றிக்களிப்பு '' என்றால்
சிங்கள தேசத்தில்
புலிக்கொடியேற்றப் பிரபாகரனாலும் முடியும்
இரத்தஆறு பெருகியோடவும்
சடலங்கள் தெருவில் சிதறிக்கிடக்கவும்
எட்டிக்கடந்து வந்து கொடியேற்றிய ரத்வத்தவுக்கு
ஒன்றுரைப்போம்.
அதிகாரமமதையின் ஆணிவேரே !
நீ நிறுத்திப்போகும் படைகள் நிலைக்காது.
ஓடிப்போன துரோகங்களும்
எச்சிலிலைக் காகங்களும் ஊர்புகுந்தனவாம்.
எச்சரிக்கை.
தாய்மடி தொடுகின்றோர் யாரெனினும்
குரல்வளை குதறப்படுவர்.
புலிவீரம் பணியாதென்பது நிறுவிய விதி.
இது
விம்புக்கு நீயாடும் வீதிநாடகம்.
அக்காவின் அரியணைக்கு
குறிவைத்து நடக்கும் பேரெடுப்பு
பின்னுரிமம் வாங்கும் பிரசாரம்
வென்றன்றி வீடுவரேனென்று
மொனறாகலையில் பேசியபோதே
உன் முகமூடி கிழிந்து போனது
ஊருக்காகவும், பேருக்காகவும்
நீ நடத்தும் ஊமைநாடகம்.
எம்மூர்புகுந்து எரிக்க உன்னால் முடியுமெனில்
உன்னூர் புகுந்து எரிக்க எம்மால் முடியாதா?
நீ எடுத்துவைக்கும் ஒவ்வொரு காலடிக்கும்
கணக்கு முடிக்கவேண்டி வரும்.
வலிகாமத்தை பலீபீடமாக்கிவிட்டாய்
அடிமைகளை அழைத்துச் செல்வதுபோல
ரூபவாஹினியில் காட்சி கொடுத்தாய்
வலிகாமம் கொண்டு சென்றாயே
அது அடிமைகளல்ல... வெடிமருந்துப் பொதிகள்.
இனி
எம்மிலிருந்தோர் தலைமுறை துளிர்க்கும்
கைகெட்டும் தூரத்தில் எதிரியுடன் மோதும்
துணிவு அவர்களுக் குச் சேரும்.
சாவுக்கு நாட்குறித்து
நேரம் குறித்து
விரையும்பலம் இனியும் விளையும்
பகைக்குட் புகும் பலம் கைவரும்.
விழவும்
விழுந்தாலும் எழவும்
வீரம் அவர்களுக்குள் விளையும்
வாழ்வதெனில மனிதர்களாக
அதுவும் தமிழர்களாக
இல்லையெனில் கல்லறைகளாக.
ஊட்டிவளர்ப்பவன் காட்டும் வழியிது.
பிரபாகரனென்ற நிழல் கொடுக்கும் நிமிர்வு இது.
அண்ணார்ந்து பார்க்க கண்கள் கூசும் வடிவினராய்
எம்பிள்ளைகள் இனியும் எழுவர்.
சாகாதது ஒன்றுமில்லை
சத்தியத்தைத் தவிர.
நித்தியமானது சத்தியமே.
அதர்மம் வேஷம் போட்டு ஆடும்,
கூத்து முடிந்ததும்
உண்மை முகம் உலகுக்குப் புரிந்துவிடும்
நாங்கள் சத்தியத்தின் பக்கம்
வெல்வோம்,
விரைவிலெலம் திசைகள் வெளிக்கும்
நீ வந்த இடம் மட்டுமல்ல
முன்னர் நின்ற இடமிருந்தும் ஓடுவாய்
எம் எல்லைவரை விரட்டி வந்து
கொடி நாட்டிவிட்டு
வெற்றியுடன் ஊர்புகுவோம்.

www.eelamview.com

www.eelamview.com





சந்திரிகா ''சமாதானத்திற்கான போர்'' ஒன்றைச் செய்துவருவதாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பிரச்சாரம் செய்துவருகிறார். உலகில் எங்கும், யாரும் சமாதானத்திற்கான போர் நடாத்தியதாக வரலாறு இல்லை. அப்படியானபோது ''சமாதானத்திற்கான போர்'' என்று சந்திரிகா கூறிவருவது என்ன? இங்குதான் பேரதிர்ச்சி தருகின்ற 'உண்மையொன்று பொதிந்துள்ளது. தமிழினத்தைப் 'பூண்டோடு அழிக்கின்ற சந்திரிகாவின் திட்டத்தின் நாகரிகப் பூச்சே ''சமாதானத்திற்கான போர்'' என்பதாகும். தமிழ் மக்கள் அழிக்கப்பட்டால் இலங்கையில் சமாதானம் தானாக உருவாகிவிடும் என்ற கோட்பாட்டின் அடிப்படையிலேயே, சந்திரிகா திட்டமிட்டுத் தனது காய்களை நகர்த்தி வருகிறார் என்பதுதான் உண்மை. இந்த நிலையில் தமிழ் மக்களிற்கு முன்னாலுள்ள கேள்வி, 'நாங்கள் வாழப்போகின்றோமா அல்லது சாகப்போகின்றோமா?' என்பதுதான்.

சாள்ஸ் டார்வின் என்ற இயற்கை விஞ்ஞானியின் பரிணாமக் கொள்கையின்படி, இந்த உலகிலுள்ள அனைத்து உயிரினங்களும் தமது உயிர்வாழ்தலிற்கான தப்பிப்பிழைத்தலை மேற்கொள்ளுகின்றன. இயற்கையுடனான இந்த உயிர்வாழ்தலில், போராடக்கூடியன மட்டுமே எப்போதும் தப்பிவந்துள்ளன; ஏனையவை இந்தப் போராட்டத்தில் அழிந்து போயின. சுருக்கமாகச் சொன்னால், வல்லவன் வாழ்வான் என்பதுதான். பூமி உருவாகிய காலத்திலிருந்து இயற்கையாகத் தோன்றிய கோடிக்கணக்கான உயிரினங்கள் - மரம் செடி கொடிகளில் இன்று எத்தனை உயிரோடு உள்ளன? டைனோசர், மாமுத்யானை, இராட்சதப் பறவை உட்பட எத்தனையோ வகையான உயிரினங்களும், மரம் செடி கொடிகளும் இயற்கையுடனான இந்தப் போராட்டத்தில் அழிந்துவிட்டன. இந்தக் கோட்பாடானது மனிதனுக்கும் பொருந்தும். மனித இன வரலாற்றில் ஆதிகாலத்தில் வாழ்ந்த எத்தனையோ நாகரிக மக்கள், இருந்த இடம் தெரியாது பூண்டோடு அழிக்கப்பட்டுள்ளார்கள். மொகஞ்சதாரோ - ஹரப்பா நாகரிகம், இன்கா – மாயா நாகரிகங்கள், யூபிரட்டீஸ் – தைகிறீஸ் நாகரிகம் போன்றவற்றின் அழிவுகள் கற்றுக்கொடுக்கும் பாடத்தை நாம் மறக்கக் கூடாது. இயற்கையை எதிர்கொள்ள முடியாமலும், ஏனைய இன மனிதர்களை எதிர்கொள்ளமுடியாமலும், மனித நாகரிகங்கள் பூண்டோடு அழிந்த வரலாறுகள் உண்டு. இந்த வரலாறுகள் தமிழர்களிற்குக் கூறுவது என்ன? போராடினால் வாழ்வு; இல்லாவிட்டால் சாவு என்பதுதான்.

# வாழ்வதற்கான போர்!

இன்றைய அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து இன்னும் பல இலத்தீன் அமெரிக்க நாடுகளின் பூர்வீகக் குடிகள் யார்? நிச்சயமாக வெள்ளைக்காரர்கள் இல்லை. கொலம்பசின் வருகையைத்தொடர்ந்தே அமெரிக்கக் கண்டம் வெள்ளையினத்தைக் கண்டது. அங்கு நாகரிகமாக வாழ்ந்த- பூர்வீக - பழங்குடி மக்களைக் காட்டுமிராண்டித்தனமாக அழித்து, அடிமை வர்த்தகத்தை ஆரம்பித்து வைத்தவன்தான் இந்தக் கொலம்பஸ். அவுஸ்திரேலியாவில் கங்காருவையும் அங்கு வாழ்ந்த பழங்குடி மக்களையும் ஒன்றாகக் கருதிச் சுட்டு அழிக்க வரலாறு நிறைய உண்டு. அமெரிக்காவில் செவ்விந்தியர்கள் கூட்டம் கூட்டமாகப் படுகொலைசெய்யப்பட்டு எஞ்சியவர்கள் இனக்கலப்பு செய்யப்பட்டதை, வரலாறு ஒருபோதும் மறவாது. இன்று இந்த நாடுகளில், பூர்வீகக்குடிகள் தமது இன அடையாளங்களை இழந்து-நாகரிகத்தையிழந்து - இன்னொரு நாகரிகத்தால் மாற்றப்பட்டு, இரண்டாந்தரப் பிரஜைகளாகவே வாழ்கின்றனர்.

இந்த நிலையை மறைப்பதற்காக அந்தந்த நாடுகளின் அரசாங்கங்கள் சில சலுகைகளை வழங்குகின்றன. சலுகைகள் எனும்போது இலவச மது, இலவச புகைப்பிடித்தல், இலவச போதைவஸ்து என்று இந்த மக்கள் தங்களைத் தாமே அழித்துக்கொள்வதற்கான சலுகைகளை மட்டும் செய்கிறார்கள். இந்த நாடுகள்தான் ஜனநாயகம், மனித உரிமை என்று உலக நாடுகளிற்குப் போதிக்கின்றன. எவ்வளவு முரண்பாடு!

இந்தத் தத்துவத்தின் அடிப்படையில்தான் சந்திரிகாவும் இன்று செயற்பட்டு வருகிறார். அவரது ' சமாதானத்திற்கான போர்'' என்பது, இலங்கைத்தீவின் பூர்வீக குடிகளான தமிழர்களைப் பூண்டோடு அழிப்பது - அது முடியாவிடின், எஞ்சியவர்களை மேலே குறிப்பிட்ட நாடுகளில் வாழும் பூர்வீக குடிமக்களைப் போல இன அடையாளமற்ற இரண்டாம் தரப் பிரஜைகளாக்குவதுதான். இது சந்திரிகாவிற்கு மட்டும் உரித்தான கோட்பாடல்ல; சிங்களப் பேரினவாதத்தின் நோக்கமே இதுதான். டி.எஸ். சேனநாயக்காவிலிருந்து சந்திரிகா வரையும், மிகவும் திட்டமிட்டு தமிழ்த் தேசிய இனத்தை அழித்து வருகிறார்கள். இதை, வரலாற்றை உற்றுப்பார்ப்பவர்கள் மட்டுமே விளங்கிக் கொள்ள முடியும்.

ஒரு தேசிய இனத்தின் தூண்களாக பாரம்பரிய பிரதேசம் (நிலம்), மொழி, வரலாறு, கலை - பண்பாடு, சுயமான பொருளாதார வாழ்க்கை என்பன விளங்குகின்றன. இந்தத் தூண்களை படிப்படியாக வெட்டிச் சிதைப்பதன்மூலம் தமிழ்த் தேசிய இனத்தின் ஆன்மாவையே அழிப்பதுதான் சிங்களப் பேரினவாதத்தின் நோக்கமாகும். அத்துடன், காலத்துக்குக் காலம் இனப் படுகொலையினை மேற்கொள்வதன்மூலமும் தமிழினத்தைப் பூண்டோடு அழித்தலை, சிங்களப் பேரினவாதிகள் செவ்வனே செய்கின்றனர். டி. எஸ் சேனநாயக்கா சிங்களக் குடியேற்றங்களை ஆரம்பித்து நிலத்தைப் பறிக்க ஆரம்பித்தார்; தனிச்சிங்களச் சட்டத்தின் மூலம் தமிழ்மொழியைச் சிதைக்க ஆரம்பித்தார் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா; சிறீமா தரப்படுத்தலைக் கொண்டுவந்து தமிழ் மாணவரது உயர்கல்வியைச் சீரழித்தார்; காமினி இனப்படுகொலை செய்ததோடு, பண்பாட்டின் சிகரமாக இருந்த யாழ். நூலகத்தையும் எரித்தழித்தார்; ஜெயவர்த்தனா, ''போர் என்றால் போர்'' என்றார், வெளிநாட்டவரையும் இந்தியரையும் அழைத்து, தமிழினப் படுகொலைக்கு பங்கு சேர்த்தார். சிங்களப் புத்திஜீவிகள் வரலாற்றைத் திரிபுபடுத்தி, பூர்வீக குடிகளான தமிழர்களைக் கள்ளத்தோணிகளாக்கினார்கள். இவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போல தேவாலயங்களிலும், பாடசாலைகளிலும், அகதி முகாம்களிலும் குண்டுவீசி அழித்து, தமிழர்கள் காலங்காலமாக நாகரிகமாக வாழ்ந்த யாழ். மண்ணிலிருந்து வேரோடு பிடுங்கியெறிந்து, இன்னும்... தமிழர்களைக் கலைத்துக் கலைத்துக் கொல்ல சந்திரிகா வந்துவிட்டார். இதுவரை காலமும் ஆட்சியிலிருந்த சிங்களப் பேரினவாதிகள் அனைவரையும் தூக்கியெறிந்து, பேரினவாதத்தின் உச்சாணிக் கொம்பிலேறி ஆட்சி புரிய வந்துள்ளவர்தான் இந்த சந்திரிகா. 60 இலட்சம் யூதர்களைக் கொன்றொழித்த கிட்லரை விடப் பயங்கரமான கொடியவர்தான் இவர். உலக நாடுகளையும், இலங்கையிலுள்ளவர்களையும் ஏமாற்றுவதற்காக இவரால் மேற்கொள்ளப்படும் இனவழிப்பானது, '' சமாதானத்திற்கான போர் '' எனும் வடிவம் எடுத்துள்ளது.

இந்த நிலையில், தமிழர்களாகிய நாம் எம்மை நாமே சுயபரிசோதனை செய்யவேண்டிய காலம் வந்துவிட்டது. உலகிலேயே முன் தோன்றிய மூத்த குடி: தொன்மை வாய்ந்த தமிழ்மொழியும் - நாகரிகமும் சிறந்த பண்பாடும் உடைய இனத்திற்கு என்ன நடந்தது? ஏன் இந்த வீழ்ச்சி? சங்கிலி மன்னனது வீழ்ச்சிக்குப் பின் அடிமை வாழ்வை ஏற்ற நாம், இன்னும் அதிலிருந்து மீளமுடியாமல் தவிக்கின்றோம். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், சிங்களவர், இந்தியர் என அடக்கியாள யார் வந்தாலும் அவர்களைப் பணிவுடன் ஏற்று, அவர்களிற்கு விசுவாசமாக அடங்கிப்போனவர்கள்- 400 வருட காலமாக அடிமைமோகத்தில் மூழ்கி அதனையே வாழ்க்கையாக நம்பியிருந்தவர்கள் தான் - தமிழர்கள். இதுதான் தமிழனது பாரம்பரியமா என்றால், இல்லை. பண்டைக்காலத்தில் வீரத்துடனும், நாகரிகத்துடனும் வாழ்ந்தவர்கள் தமிழர்கள் போரும் தியாகமும் அவர்களது வாழ்க்கையில் இரண்டறக் கலந்திருந்தன; போர்க்களத்தில் வீரச்சாவடைபவர்களை மட்டுமே அவர்கள் வழிபட்டு வந்தார்கள். இமயமலை முதல் கடாரம் வரை இவர்கள் காலடியிலிருந்தன. இந்து சமுத்திரம் இவர்கள் விளையாடும் தொட்டிலாக இருந்தது. இவ்வாறான ஒரு வீர பரம்பரை எப்படி அடங்கிப்போனது? இதற்கு வரலாறுதான் விடை சொல்ல வேண்டும். 400 வருடகாலம் தமிழன் அடிமையாகி, வாழ்வில் அடிபட்டு, அவமானப்பட்டு, ஒதுக்கப்பட்டு, வாழ முடியாமல் ஜீவமரணப் போராட்டத்தை நடத்தியபோது, போராடினால் வாழ்வு உண்டு என்பதை உணர்த்தியவர் பிரபாகரன் எனும் மாமனிதர். வரலாறு தருந்த நேரத்தில் பிரபாகரனை உருவாக்கியது. அவர்தான் தமிழனுக்கு வீரத்தையும், போர்க்கலையையும் சொல்லிக்கொடுத்தார்; அடிப்பவனுக்கு திருப்பியடிக்கக் கற்றுத்தந்தார்: தமிழனது ஆன்மாவுடன் கலந்திருந்த வீரத்தையும் தியாகத்தையும்வெளிக்கொணர்ந்து, தலைநிமிர்ந்து வாழ வழிகாட்டினார். பிரபாகரனால்தான் தமிழர்கள் போர்க்குணம் கொண்டார்கள். காலங்காலமாக அடக்குமுறையில் ஒடுங்கியிருந்த தமிழர்களது கோபக்கனலே விடுதலைப் புலிகளாகும். விடுதலைப் புலிகள் இயக்கம் என்பது தமிழர்களது போர்க்குணத்தின் ஒரு வெளிப்பாடாகும். விடுதலைப் புலிகள் வேறு மக்கள் வேறு என்று சந்திரிகாவோ அல்லது வேறு எவரோ கருதுவாராயின், அவர் மிகப்பெரிய தவறை விடுபவராகிறார். விடுதலைப் புலிகளையும் மக்களையும் பிரிப்பதென்பது, தமிழர்களை அழித்தொழிப்பதற்குச் சமனாகும். காலங்காலமாக அடக்கியொடுக்கப்பட்ட தமிழனது, அவமானப்பட்ட ஆத்திரத்தினதும் பழிவாங்கலினதும் வெளிப்பாடாகவே விடுதலைப் புலிகளது தாக்குதல்களை ஒவ்வொரு தமிழனும் உணர்கிறான் என்றால், அது மிகையாகாது. சமர்களில் விடுதலைப் புலிகள் வெல்லும்போது தமிழர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள்; விடுதலைப் புலிகள் இழப்புக்களைச் சந்திக்கும் போது அவர்கள் கவலைப்படுகிறார்கள். இதுதான் யதார்த்தம். இங்கு தமிழர்கள் எனும் போது வட-கிழக்கிலுள்ள தமிழர்களை மாத்திரம் குறிப்பிடவில்லை. தென்பகுதியிலும் உலகம் முழுவதிலும் பரந்து வாழும் தமிழர்களையும் அது உள்ளடக்கும். 1983 இற்குப் பின்பு தென் பகுதியில் இனக்கலவரம் வராமல் இருப்பதற்குக் காரணம் என்ன? சிங்கள அரசாங்கங்களின் தார்மீகமா? இல்லை; தமிழர்கள் திருப்பியடிப்பார்கள் என்ற அச்சம்தான். இன்று பெங்களூரிலும், மும்பாயிலும் அடிவாங்குகின்ற தமிழர்கள் யாரை நினைக்கிறார்கள்? உலகெங்கிலும் பரந்து வாழும் தமிழர்கள் தமக்குத் துன்பம் வரும்போது யாரை நினைக்கிறார்கள்?

**வி. மணிவண்ணன்**

அண்மையில் விடுதலைப் புலிகளிற்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் செய்யக்கூடாது என்று மலேசிய அரசு தடைவிதித்ததன் காரணம் என்ன? மலேசியாவில் வாழும் பல இலட்சம் தமிழர்கள் தங்கள் தலைவராக, தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனைக் கருதுவதுதான். இது எதனைக் காட்டுகிறதென்றால், தமிழர் படையொன்று இங்கு பலத்துடன் உருவாகிறது என்பதைத்தான்.

இன்றுள்ள நிலையைப் பார்ப்போமாக இருந்தால், தமிழரின் நாகரிக மையமான யாழ்நகரிலிருந்து தமிழர்கள் வேரோடுபிடுங்கியெறியப்பட்ட நிலை அகதிகளாகத் தஞ்சம் புகும் இடங்களை நோக்கியும் இராணுவ நடவடிக்கை தொடரும் அபாயம், இருக்க இடமில்லாமல் தமிழன் அகதியாக - அநாதையாக அலையும் அவலம். தொடரும் விமானக் குண்டுவீச்சு, எறிகணைவீச்சு, படுகொலைகள், பொருளாதார, மீன்பிடி, விவசாய உள்ளீடு, அத்தியாவசிய மருந்து... இன்னும் தமிழனைப் பட்டினிபோட்டுக் கொல்ல பல தடைகள். சந்திரிகா அரசாங்கம் தமிழர்களுக்கு என்ன செய்ய முற்படுகிறது? புலிப்பந்திலிருந்தே தமிழர்களைப் பூண்டோடு அழித்துவிடக் கங்கணம் கட்டிநிற்கிறது என்பதுதான் உண்மை. பரிணாமக் கோட்பாட்டின் அடிப்படையில், வாழ்தலிற்கான போராட்டத்தில் தமிழர்களால் தப்பிப்பிழைக்க முடியுமா?; அல்லது அழிந்து போய்விடுவார்களா? உயிர்வாழ்தலிற்கான ஜீவமரணப் போராட்டத்தில் தமிழர்கள், வாழ்வா சாவா என்பதை முடிவெடுக்க வேண்டிய கட்டத்திலுள்ளார்கள் போராடினால் வாழ்வு; பயந்தோடினால் சாவு என்பதுதான் விடையாகும். இனிமேல் வாழ்வு என்பது தமிழீழத் தேசத்தில் தான். இதுதான் உண்மை; இதுதான் யதார்த்தம். எனவே, தமிழர்கள் தாம் வாழ்வதற்குப் போராடியே ஆகவேண்டும்! O

www.eelamview.com

www.eelamview.com



# அதிரடிப்படையின் படுகொலைகள்!

கொழும்பில் இருந்து வெளியிடப்படும் அரசியல் சஞ்சிகையான கவுண்டர் பொயின்ற் (ஒக். 95) இதழில் வெளியான கட்டுரை ஒன்றின் முக்கிய பகுதிகளை இங்கே தந்துள்ளோம்; கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் மீது சிங்களப் படைகள் புரிந்த படுகொலைகள் பற்றிய ஆவணமாகவும் இந்தக் கட்டுரை அமைந்துள்ளது.

கேமன் குணரட்ண என்பவர் எழுதி உள்ள இறைமை உள்ள அரசுக்காக என்ற நூலினையும் – ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் அத்துக்கோறல, சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு எழுதியவற்றை ஆதாரமாகக்கொண்டும் இந்தக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. 'விசேட செய்தியாளர்' என்ற பெயரில் இந்தக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது; ஆயினும், 'தமிழரின் நோக்குநிலையில் இருந்து' என்ற அடைமொழி சஞ்சிகையின் ஆசிரியரால் கொடுக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா அரசு இயந்திரத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக ஏவிவிடப்பட்டுள்ள அரசுப் பயங்கரவாதம், எங்ஙனம் நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ளது என்பதைக் கட்டுரை வெளிப்படுத்துகின்றது. சகல வழிமுறைகள்மூலமும் தமிழ் இன அழிப்பை துரிதமாக மேற்கொள்வதற்காக அமைப்புக்களை உருவாக்கி – அதற்குப் பொருத்தமான ஆட்களை நியமித்து – அரசு எவ்விதம் அதை நிறைவேற்றுகின்றது என, இக்கட்டுரை சுட்டிக் காட்டுகின்றது.

'ஆளும் வர்க்கத்தினதும் – அரசுப் பயங்கரவாதத்தினதும் அழுகிய பழங்கள்' என்பது அந்த ஆங்கிலக் கட்டுரையின் தலைப்பாகும். ஆயினும், இந்த அரசுப் பயங்கரவாதத்திற்கு ஒருசிலர் மட்டும்தான் காரணம் என்று கூறுவதை மறுக்கும் இந்தக் கட்டுரையாளர், அதன் அரசியல் – சமூக பரிமாணத்தையும் அந்தக் கட்டுரையில் ஆய்வு செய்துள்ளார்.

'மகாவலி அபிவிருத்திச் சபை' என்ற பெயரிலும், 'தற்பாதுகாப்பிற்காக எல்லையோரச் சிங்களவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டன' என்ற முடுதிரைமூலமும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை அரசு எவ்வாறு நடாத்தியது என்பதையும் – அவற்றின் பின்னால் இருந்த "பெரிய" மனிதர்களையும் இந்தக் கட்டுரை ஆதாரபூர்வமாக அம்பலப்படுத்தி உள்ளது.

ஆயினும், அந்தக் கட்டுரையின் நீளங்கருதியும் - அந்தத் தகவல்களின் அடிப்படைகளை எமது மக்கள் ஏற்கெனவே அறிந்துவைத்திருக்கின்றனர் என்ற காரணத்தாலும் அவற்றைத் தவிர்த்துவிட்டு, அரசுப் பயங்கரவாதத்தில் எஸ். ரி. எவ்விற்கும், இராணுவத்திற்கும் இருந்த பங்கை நிரூபணத்துடன் வெளிப்படுத்தும் பகுதிகளை மட்டும் இங்கே பிரசுரித்துள்ளோம். எந்த இராணுவ அல்லது விசேட அதிரடிப்படை அதிகாரியின் தலைமையில் - எந்தக் கிராமப் படுகொலை நடைபெற்றுள்ளது, அதை எவ்விதம் அரசு மூடி மறைத்தது என்பதையும் இந்தக் கட்டுரையில் காணலாம்.

அதேவேளை, தமிழர்களை அழிக்கவெனப் பயிற்றுவிக்கப்பட்ட ஒரு கொலைப் படை, சிங்கள மக்களையும் கொன்றுதள்ளிய கதையும் இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ளது.

கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கைகளில் திறமை காட்டிய வெளிநாட்டுக் கூலிப் படையின் உதவியுடன் உருவாக்கப்பட்ட எஸ். ரி. எவ்வினர், போராட்டத்தை முறியடிப்பதில் திறமை காட்டுவதற்குப் பதிலாக, தமிழ் இளைஞர்களது எண்ணிக்கையைக் குறைப்பதற்காக அப்பாவித் தமிழர்களை நரவேட்டையாடிய துயரக் கதைகளைக் கட்டுரை தருகின்றது. எஸ். ரி. எவ்வினர் செய்த தமிழ் இனப் படுகொலை கண்டு, அவர்களைப் பயிற்றுவித்த கூலிப்படையினரே, வெறுப்பும் – விசனமும் அடைந்தனர் என்ற தகவலும் கட்டுரையில் உள்ளது. இனி, கட்டுரையைப் படிக்கவும்.

## விசேட அதிரடிப்படை

1984 இல், ரவி ஜெயவர்த்தனாவால் எஸ். ரி. எவ். உருவாக்கப்பட்டது; சிறிலங்கா காவல் துறையின் ஒரு பகுதியாக இது விளங்கியது. தேர்ந்தெடுக்கப்பட்டோரைக் கொண்டு அமைக்கப்பட்ட இந்தச் சிறப்புப் பிரிவு, சேர்ணி விஜேசூரியாவை தனது முதலாவது கொமாண்டன்ற்றாகக் கொண்டிருந்தது. பிரித்தானிய அதிரடிப்படையான எஸ். ஏ. எஸ். என்ற அமைப்பைப் போன்றே இதையும் உருவாக்க, ரவி ஜெயவர்த்தனா முயன்றார். இதற்காக கீனி மீனி சேவை என்கின்ற அமைப்பில் பணியாற்றிவந்த, முன்னாள் எஸ். ஏ. எஸ். வீரர்களை அவர் வாடகைக்கு அமர்த்தினார். 40 அல்லது 50 கூலிப்படையினருக்குச் சம்பளமாக மாதாந்தம், தலா 20,000 இங்கிலாந்துப் பவுண்கள் (ஒரு இலட்சம் ரூபாவுக்கும் மேல்) வழங்கப்பட்டன.

கிளர்ச்சியை அடக்கவென கிழக்கு மாகாணத்திற்கு அனுப்பப்பட்ட எஸ். ரி. எவ்வினர் செய்தவை, வாசிப்பதற்குப் பயங்கரமானவை. அவர்களுடைய பணிகளில் ஒன்று, தமிழ் - முஸ்லிம் ஒற்றுமையைச் சீர்குலைப்பது. முஸ்லிம் காடையர்களை ஒன்றாக்கி காரைதீவு தமிழ்க் கிராமம் மீது, 1985 ஏப்ரில் 12 - 14 வரை, ஒரு பெரிய கொலைத் தாக்குதலை நடாத்துவித்தனர். இந்தப் பிரித்துவைக்கும் கொள்கையால் - அடுத்தடுத்து வந்த சில ஆண்டுகளில் – தமிழர்களும் முஸ்லிம்களும் பெருந்துன்பங்களை எதிர்கொண்டனர். 1985 மே 11ஆம் திகதி, ஒலுவிலில் உள்ள தமிழர்களது வீடுகளுக்கு எஸ். ரி. எவ்வினர் தீமூட்டினர். 1985 மே 17 ஆம் திகதி, நாய்ப்பட்டிமுனையிலிருந்து, 23 இளைஞர்கள் எஸ். ரி. எவ்வினரால் கடத்திச் செல்லப்பட்டுக் கொல்லப்பட்டனர். அக்கரைப்பற்றுக்கு அருகில் உள்ள தம்பாட்டி என்ற இடத்தில், இந்த 23 பேர்களது உடல்களும் புதைக்கப்பட்டன. இந்தப் படுகொலைச் சம்பவத்தை பிரசைகள் குழுத் தலைவர் போல் நல்லநாயகம் அவர்கள் பகிரங்கப்படுத்தியபோது, எஸ். ரி. எவ்வினரின் படுபாதகச் செயல்களும் சந்திக்கு வந்தன. இதற்குப் பரிசாக பிரசைகள் குழுத் தலைவர் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டார். மனித உரிமைகள் இயக்கத்தின் உதவியால் அவர் வழக்கை வென்று விடுதலையானார். எஸ். ரி எவ். என்ற சொற்பதம் கிழக்கு மாகாணத்தில் பீதியூட்டும் ஒன்றாகிவிட்டது.

எஸ். ரி. எவ். புரிந்த மிகமோசமான சம்பவமாக கொக்கட்டிச்சோலை இறால் பண்ணையில் நடந்த படுகொலைச் சம்பவம் அமைந்துள்ளது. 1987 யூலை முதல் வாரத்தில், புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த கொக்கட்டிச்சோலையைக் கைப்பற்ற எஸ். ரி. எவ்வினர் ஒரு முயற்சியைச் செய்தனர்; அதில் 20 படையினர் கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து, இறால் பண்ணைத் தொழிலாளர்களில் 120 பேர் எஸ். ரி. எவ்வினரால் கொல்லப்பட்டனர். பிரபல பத்திரிகையாளரான இக்பால் அத்தாஸ் உட்பட ஒரு குழுவிற்கு, சம்பவம் நடந்த இடத்திற்குச் செல்ல அனுமதி வழங்கப்பட்டது. தான் கண்டது பற்றி இக்பால் அத்தாஸ் பின்வருமாறு எழுதினார்: "நான் மக்களுடன் உரையாடத் தொடங்கினேன். அவர்கள் எஸ். ரி. எவ்விற்குப் பயந்து நடுங்கியதுமாதிரித் தெரியவில்லை. 'எஸ். ரி. எவ். உங்களை இம்சிக்கின்றதா?' என ஒருவரிடம் கேட்டேன்; 'இல்லை' என அவர் தெளிவாகச் சொன்னார்." இந்த உரையாடல்களுக்குப் பின்னர், எஸ். ரி. எவ்விற்கு எதிரான குற்றச்சாட்டுகளில் எதுவித உண்மைகளும் இல்லை என்று இக்பால் அத்தாசும் எழுதினார், பி.பி.சியின் கொழும்பு முகவராக அப்போது இருந்த ஜோன் றெட்டி. பின்னர் இவ்வாறு எழுதினார்: "எனக்குத் தகவல்கள் தருபவரில் ஒருவர் என்னைத் தவறாக வழிநடாத்தினார்."

தமது உறவுகளை அந்தப் படுகொலைச் சம்பவத்தில் பறிகொடுத்த கொக்கட்டிச்சோலை வாசிகள் கூறினர், "... அன்று, சுமார் 80 தொழிலாளர்களை வரிசையாக நிற்கும்படி பணித்தனர். அதன்பின்னர், திரையிடப்பட்ட ஒரு இடத்திற்கு - ஒருவர் பின் ஒருவராக - அடையாள அட்டைகளுடன் வரும்படி பணித்தனர். அப்போது, ஒவ்வொருவராகக் கொல்லப்பட்டனர். அன்று மாலைவரை படுகொலை தொடர்ந்தது." அதைப்போன்ற சம்பவங்கள் பலவற்றில் எஸ். ரி. எவ்வினர் ஈடுபட்டனர்.

## 1987 - 89 ஜே. வி. பி. கிளர்ச்சி

இந்திய அமைதிப்படையின் வருகையைத் தொடர்ந்து, ஜே. வி. பியின் இரண்டாவது கிளர்ச்சி ஆரம்பமானது; எஸ். ரி. எவ். தென் இலங்கைக்கு அனுப்பப்பட்டது. அந்தக் காலத்தில் பச்சைப்புலிகள் என்றொரு கொலைக் குழு தோன்றியது. இந்தக் குழுவுக்குப் பொறுப்பாக ரவி ஜெயவர்த்தனா இருந்தார் என்ற குற்றச்சாட்டு எழுந்தது. இது, எஸ். ரி. எவ்வின் ஒரு பிரிவு என்றும் குற்றம் சாட்டப்பட்டது.

21. 2. 88 ஆம் திகதிய சண்டே ரைம்ஸ் இதழில், ரவி ஜெயவர்த்தனாவின் செவ்வியொன்று இடம்பெற்றுள்ளது. இதில், மேற்குறித்த இரு குற்றச்சாட்டுக்களையும் அவர் நிராகரித்திருந்தார். ஆயினும், ரவி ஜெயவர்த்தனாவின் சகாவான குணரட்ணா என்பவர் இவ்வாறு கூறினார்: "...'எஸ். ரி. எவ்வினரின் போர்முறை இதுவல்ல. கள நடவடிக்கைகளில் இருந்து எஸ். ரி. எவ்வினரை விரைவாகத் திருப்பி அழைக்கவேண்டும்' என்று ரவி ஜெயவர்த்தனா என்னிடம் சொன்னார். இறுதியில் 1988 யூலை, அவர் அதில் வெற்றியும் பெற்றார்.

'ஜய நியத்தய்' (வெற்றி நிச்சயம்) என்பதே எஸ். ரி. எவ்வின் கோஷம். பிரிவினைவாதிகளுக்கு எதிரான வெற்றிபற்றியே ரவி ஜெயவர்த்தனா அடிக்கடி கதைப்பார். ஆயினும், சிங்களவர்களை எஸ். ரி. எவ். படுகொலை செய்யத் தொடங்கியபோது, ரவி ஜெயவர்த்தனா பெரிதும் ஏமாந்துபோனார்." இன்னொரு விதமாகச் சொல்வதானால் எஸ். ரி. எவ்வினரின் வேலை தமிழர்களைக் கொல்வது என்பதே ஆகும். ஆனால் இப்போது அது, சிங்களவர்களைக் கொன்றுவிட்டது.

## 1990 இற்கு பின்

1990 யூன் 10இல் 'இரண்டாவது ஈழப்போர்' தொடங்கியபோது, லயனல் கருணாதிலக என்பவரின் தலைமையில், எஸ். ரி. எவ். மீண்டும் செயற்படத் தொடங்கியது.

பொத்துவிலுக்கு அருகே உள்ள அறுகம் குடா என்ற இடத்தில் கசன் என்ற எஸ். ரி, எவ். அதிகாரியின் கீழ் ஒரு முகாம் இருந்தது. அங்கு தடுத்துவைக்கப்பட்டிருந்த தமது பிள்ளைகளை அவர்களின் தாய்மார் ஏக்கத்துடன் பார்த்துக்கொண்டிருந்தனர்; ஆனால் கதைப்பதற்கு அனுமதி கொடுக்கப்படவில்லை. பின்னர் அவர்கள் காணாமற்போய்விட்டார்கள். ஓகஸ்ற் 2ஆம் திகதி, எஸ். ரி. எவ்வினரின் சிபார்சிற்கு இணங்க, இடம்பெயர்ந்தோர் முகாம்களில் இருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த சுமார் 120 தமிழர்கள், எஸ். ரி. எவ்வினரால் சுற்றிவளைக்கப்பட்டுக் கைதுசெய்யப்பட்டனர். பின்னர் பெரும் புகைமண்டலம் எஸ்.ரி.எவ். முகாமுக்குள் இருந்து வான் நோக்கி எழுந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. அந்த நாட்களில், கல்லாறு கடற்கரையில் சுமார் 35 தமிழர்களை வரிசையாக நிற்கவைத்து, அவர்களை 'பவல்' கவசவாகனத்தால் நெரித்துக் கொன்றனர். திருக்கோவிலில் சுமார் 40 தலை அற்ற உடல்களும் உடல் அற்ற தலைகளும், அந்த 5 மைல் நீளத்திற்கு கடற்கரையில் ஒதுங்கின. ரட்நாயக்கா என்பவரே திருக்கோவில் எஸ். ரி. எவ். முகாமின் பொறுப்பதிகாரியாவார்; இந்த அதிகாரி பின்னர் ஏ. எஸ். பி. ஆகப் பதவி உயர்த்தப்பட்டார். இப்போது இவர் ஜனாதிபதி சந்திரிகாவின் பாதுகாப்புப் பிரிவில் அங்கம்வகித்துவருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. அக்கரைப்பற்றிலும் இத்தகைய கொடுங்கொலைகள் நடந்தன. களு றஞ்சித் என்ற அதிகாரியின் தலைமையில், இங்கே ஒரு கொலைக்கூடம் இயங்கிவந்தது. இந்தப் படுகொலைகளுக்கு ஒரு சிலர் மட்டும்

→

www.eelamview.com

www.eelamview.com



# நுணுக்குக்காட்டி

"நாட்டைப் பிரிக்கும் தமிழ் இனவாத ஆக்கிரமிப்பொன்று வெளிநாட்டுச் சக்திகளின் ஆதரவுடன் இந்நாட்டில் இருப்பதைக் கூறுவதன்மூலம் நாம் எதிர்பார்ப்பது, அந்த ஆக்கிரமிப்பைத் தோற்கடிப்பதற்குத் தேவையான அடித்தளத்தை அமைப்பதாகும். ஆக்கிரமிப்பின் ஒரு அங்கமாக ஆயுதமேந்திய புலிப்பயங்கரவாதம் விளங்குகின்றது. அதனை இராணுவ நடவடிக்கையொன்றின்மூலம் தோற்கடிக்க வேண்டும். ஏனைய தமிழ் இனவாதக் கட்சிகளால் கொண்டு செல்லப்படும் அரசியல் திட்டம் அடுத்த பிரிவாகும். அதனை அரசியல்ரீதியாகத் தோற்கடிக்க வேண்டும்."

- நளின் டி சில்வா
('திவயின' பத்திரிகையில்)
'வீரகேசரி' - 24. 04. 1996

---

"தமிழ் மக்களின் எதிர்ப்பை மழுங்கடிப்பதற்காக யாழ். மக்களை ஆடு, மாடுகள் போல் கலைத்து அடிப்பது மிகவும் துக்கமானதொரு விடயமாகும். அநாதைகளாக்கப்பட்ட அம்மக்கள், ஒரு குழப்பட்ட படையினால் எத்திசைக்கும் இட்டுச் செல்லப்படலாம். படையினர் மும்முனைகளில் முன்னேறும்போது, விமானப் படையும் கடற்படையும் எல்லாப் பாதைகளையும் அடைத்துத் தாக்குதல்களை நடத்துகின்றன. 'செத்துமடி' அல்லது 'யாழ்ப்பாணம் போ' என்பதுதான் அருமை ஜெனரல் அனுருத்தவின் செய்தியாகும்."

- கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தின
'வீரகேசரி' - 25. 04. 1996

---

"பௌத்த பிக்குகள் வெளிநாடு சென்று தர்ம போதனைகளில் ஈடுபட்டு வருவதற்குப் பதிலாக, வடக்குக் கிழக்கில் உபதேசங்கள் செய்வதில் ஈடுபட்டிருந்திருந்தால் இன்றைய பயங்கரவாதம் ஏற்பட்டிருக்க வழி ஏற்பட்டிருக்காது.

... இனிமேலாவது எமது பௌத்த பிக்குகள் வடக்குக் கிழக்கிற்குச் சென்று தமிழ் மொழியில் உபதேசங்களைப் புரிவார்களானால், நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைக் கட்டுப்பாட்டில் கொண்டுவரலாம் என்பது எனது நம்பிக்கை."

- நெவில் கனகரத்ன
(தென் மாகாண ஆளுநர்)
'வீரகேசரி' - 25. 04. 1996

---

"... ஆனால் (தென்னிலங்கையில்) பாடசாலைகள் மூடப்பட நேர்ந்தது, எல். ரி. ரி. ஈயின் மிரட்டலின் காரணமாக அல்ல. படையினரால் தவறுதலாக யாழ்ப்பாணப் பகுதியில் பாடசாலையொன்றின் மீது குண்டு போடப்பட்டு சுமார் 60 பிள்ளைகளுக்கு அசம்பாவிதம் ஏற்பட்டதன் காரணமாக, பழிவாங்கும் நோக்குடன் எமது பாடசாலைகளுக்கும் எல். ரி. ரி. ஈ. தாக்குதல் நடத்தலாம் என்ற சந்தேகத்தின் பேரிலேயே அரசு பாடசாலைகளை மூடியது."

- பேர்சி சமரவீர
(ஊவா மாகாண முதலமைச்சர்)
'வீரகேசரி' - 23. 04. 1996

---

"... கோணேஸ்வரர் ஆலய தீர்த்த உற்சவத்தின்போது நடந்த சம்பவமும், நகர முதல்வர் தாக்கப்பட்ட சம்பவமும் தட்டிக்கழிக்கப்பட முடியாத ஒன்று.

... பாடல் பெற்ற தலமான திருக்கோணேஸ்வர ஆலய தீர்த்த உற்சவ விழா ஆரம்பமாக இருந்த வேளையில், அப்பகுதி பாதுகாப்புப் படையினர் சட்டத்தையும் நீதியையும் தம் கையில் எடுத்துக்கொண்ட சம்பவத்தால் விளைந்த விளைவுகள், எமது நாட்டின் தமிழர்கள் மனதை வெகுவாக புண்படுத்தியிருக்கிறது. இவ்வாலயத்தையும் ஆலயப் பிரதேசத்தையும் புனித பிரதேசமாக பிரகடனப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை இதுவரை அரசால் நிறைவேற்றிக் கொடுக்கப்படாததையிட்டு மக்கள் மனது ஏலவே புண்பட்டது போதாது என்ற நிலைக்கு, இது ஒரு எடுத்துக்காட்டாக அமைந்துவிட்டது."

- எஸ். மனோகரன்பிள்ளை
(கல்முனைத் தொகுதி
இந்துக்கள் பேரவைச் செயலதிபர்)
'வீரகேசரி' - 23. 04. 1996

---

"...முன்னைய சிங்களத் தலைவர்களைப் போலவே இப்போதைய இலங்கை ஜனாதிபதி அவர்களும் தமது கடப்பாடுகளைக் கைவிட்டு, அவர் மீது தமிழ் மக்கள் வைத்த நம்பிக்கைகளுக்குத் துரோகமிழைத்துள்ளார் என்பதை ஆழ்ந்த துக்கத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

நீதி நியாயங்களுக்கு அமைவான அரசியல் தீர்வுகளைப் புறந்தள்ளி, இராணுவ வழிமுறையில் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சிகளே மேலோங்கியுள்ளன -

...தமிழர் தாயகம் மீதான சகல இராணுவத் தாக்குதல்களையும் நிறுத்தி, யாழ். குடாநாட்டில் நிலைகொண்டுள்ள இராணுவத் தளங்களை விலக்கி, பேச்சுவார்த்தைகள் மூலமான தீர்வுக்கு வழிவகுக்கும் வகையில் அங்கு மக்கள் சென்று குடியேற வழிசெய்யுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்."

- யாழ். மாவட்ட
வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம்
(ஐ.நா. செயலருக்கு அனுப்பிய மகஜரில்)
'வீரகேசரி' - 17.04.1996

---

"தமிழ் மக்கள் இந்த நாட்டில் தங்கள் சுயநிர்ணய உரிமை, தேசியம், பிரதேச சுயாட்சி, பாதுகாப்பான தாயகம் என்பவற்றுக்காக முன்னெடுத்துள்ள போராட்டத்தை நாங்கள் நீதியானதென நியாயப்படுத்தும் அதேவேளை, இந்த யுத்தத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம். சமாதானத்திற்கான யுத்தம் எனப் பிரகடனப் படுத்தப்பட்டபோதுங்கூட, இது சுய அழிவையும் எதிர்மறை விளைவுகளையும் உண்டாக்கும் ஓர் யுத்தம் என்பதே யதார்த்தம்."

- யாழ். றோமன் கத்தோலிக்க திருச்சபை
'ஈழநாதம்' - 27.04.1996

---

"தொல்பொருள் ஆய்வுத்துறையில் ஈடுபடுவோர், உண்மைகளை உள்ளவாறு கண்டுகொள்வதுடன் பக்கஞ்சாரா நடுநிலையாளர்களாகவும் இருக்கவேண்டும்.

ஆனால், எமது நாட்டில் பல்துறைகளிலும் ஊடுருவியுள்ள இனவாதம் தொல்லியல் ஆய்வையும் விட்டுவைக்கவில்லை. கடந்த காலங்களில் இத்துறையில் குறுகிய இனவாத நோக்கோடு ஈடுபட்ட சிலர், உண்மைகளைத் திரித்தும் மாற்றியும் மறுத்தும் வந்துள்ளமை துரதிர்ஷ்டமானது. அண்மைக்கால ஆய்வுகள் இவற்றை இனங்காட்டுவதோடு, நிராகரித்தும் வருகின்றன."

- வணக். ஆயர்
கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை
'வீரகேசரி' - 23. 04.1996

---

"தமிழர்களுடைய அபிலாசைகளை பாராளுமன்றத் தெரிவுக்குழு ஏற்கப்போவதில்லை கையில் புண்ணுக்குக் கண்ணாடி தேவையில்லை. தமிழர்கள் தெருநாய்களைப் போல் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்படும்போது, உணவு, மருந்து, கல்வி, உறைவிடம் மறுக்கப்பட்டு வஞ்சிக்கப்படும்போது, அடிக்கடி குண்டுவீச்சுக்கும் எறிகணைத் தாக்குதல்களுக்கும் இலக்காக்கப்படும்போது, அடிப்படையில் இந்த நாட்டுக் குடிமகனாக மதிக்கப்படாதபோது, தமிழர் அபிலாஷைகள் அரசியல் யாப்பில் இடம்பெறும் என்று நினைப்பது பகற்கனவாகும்."

- ஆ. தேவராஜன்
'வீரகேசரி' - 27. 04. 1996

---

குற்றம் சாட்டப்படுவது என்பது,
யதார்த்தத்திற்கு முரணானது.

## நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள அராஜகம்

1990 செப்ரெம்பர் 5 ஆம் திகதி, வாழைச்சேனையில் முகாமிட்டிருந்த பிரிகேடியர் பி ஏ. கருணாதிலக தலைமையில், வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகத்திற்குள் நுழைந்த இராணுவத்தினர், அங்கு அகதிகளாகக் குழுமி நின்ற சுமார் 159 தமிழர்களைக் கைதுசெய்து, தம்முடன் கொண்டுசென்றனர்; இவர்கள் அனைவரும் பின்னர், காணாமற் போயினர். அப்போது கிழக்கு மாகாணத் தளபதியாக இருந்த - தற்போதைய இராணுவத் தளபதி - லெப். ஜெனரல் ஜெரி டி. சில்வா, சம்பவம் நடந்த மூன்றாம் நாள், பல்கலைக்கழக வளாகத்திற்கு பிரிகேடியர் கருணாதிலகவுடன் சென்றார். 159 பேர் கைதுசெய்யப்பட்டுச் சென்றனர் என்பது ஜெரி. டி. சில்வாவிற்குத் தெரியும். ஆனால், அவர்களது நிலைபற்றி, அவர் அங்கு, எதுவும் குறிப்பிடவில்லை. ஜெரி. டி சில்வா ஒரு நல்ல மனிதன் என்றே பலர் நம்பினர்; ஆனால், ஒரு பாரிய படுகொலையை மிகச் சுலபமாக அவர் மறைத்துவிட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத் தளபதியாக இருந்தவர் பிரிகேடியர் ஏ.எம்.யூ. செனிவிரட்ணா. பிரிகேடியர் கருணாதிலகவைப் போல இவர் கெட்ட மனிதன் அல்ல என்பது பலரது நம்பிக்கை; ஆயினும், அவரது நிர்வாகத்திற்குக் கீழும் தமிழர்கள் பலர் காணாமற் போயுள்ளனர். 1990 செப்ரெம்பர் 9 ஆம் திகதி, சத்துருக்கொண்டான் பகுதியைச் சுற்றிவளைத்த ஏ. எம். யூ செனிவிரட்ணாவின் படையினர், 180 தமிழர்களைக் கைதுசெய்து கொண்டுசென்று - கொலைசெய்தனர்.

வந்தாறுமூலை பல்கலைக்கழகத்தில் இருந்து காணாமற் போனோர் தொடர்பாக, பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக அன்றிருந்த எயர் மாசல் வோல்ரர் பெர்னாண்டோ கருத்துத் தெரிவிக்கையில், "31 பேர் மட்டுமே விசாரணைக்காக அங்கு கைதுசெய்யப்பட்டனர்; அவர்களும் உடனடியாக விடுதலை செய்யப்பட்டுவிட்டனர்" எனக் கூறியுள்ளார்.

யதார்த்தம் எப்படி இருக்கின்றது எனக் கற்பனை செய்து பாருங்கள்! பிரிகேடியர் கருணாதிலக செய்த படுகொலைகளை அறிய வேண்டும் என்று, மேஜர் ஜெனரல் ஜெரி. டி. சில்வா விரும்பவில்லை; தனது கேணல்களும் மேஜர்களும் செய்யும் படுகொலைகள் பற்றி பிரிகேடியர் ஏ. எம். யூ. செனிவிரட்ணா, அறிந்துகொள்ள விரும்பவில்லை; மேஜர் ஜெனரல் ஜெரி. டி. சில்வா என்ன செய்கிறார் என்பது பற்றி பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் அறிந்துகொள்ள விரும்பவில்லை. சிறீலங்கா இராணுவத்தின் செயற்பாடுகள் பற்றி அறிந்துகொள்ள, இவை நன்கு துணைசெய்யும்.

கிழக்கிலுள்ள தமிழ் இளைஞர்களின் எண்ணிக்கையைக் குறைக்குமாறு 1990 களில், இராணுவத்திற்குக் கட்டளைகள் அனுப்பப்பட்டன. படையை விட்டு விலகுவோரிடமிருந்து வரும் கட்டுரைகள் - மற்றும் புத்தகங்களிலிருந்து, மேற்குறித்த கட்டளைகளை அறிந்துகொள்ளக்கூடியதாக உள்ளது. O

---

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கான காப்புறுதிக் கொடுப்பனவுகள் உயர, கப்பற் கூலிகளும் உயர்வது தவிர்க்க முடியாது நிகழப்போகிறது. இதன் தொடர்ச்சியாக - ஏற்றுமதிகள் இறக்குமதிகளுக்கான செலவுகள் அதிகரிக்க, சிறீலங்காவின் ஏற்றுமதிகள் இறக்குமதிகளுக்கான விலைகள் அதிகரிக்கும். ஏற்றுமதிகளின் விலை அதிகரிப்பால், சர்வதேச சந்தைகளில் சிறீலங்காவின் ஏற்றுமதிகளுக்கான விற்பனை குறைவடைய, ஏற்றுமதிகள் வீழ்ச்சியடையும்; மறுபுறத்தில் - இறக்குமதிகளின் விலை அதிகரிப்பினூடாக உள்நாட்டில் பொருட்களின் விலை உயரும். ஏற்கெனவே, கடந்த ஆண்டு மார்ச் திங்களில் நிலவிய பணவீக்க வீதம் (5. 5%) ஒரு வருட காலத்தில் - கடந்த மார்ச் திங்களில் - இருமடங்காக (10. 6%) உயர்ந்துவிட்டது. இத்தகைய நிலையை, துறைமுகத் தாக்குதல் மேலும் மோசமடையச் செய்யப்போகின்றது!

மேலும், கப்பல்களின் காப்புறுதிக் கட்டண அதிகரிப்பினால், தரித்து நிற்கும் செலவுகூடிய ஒரு துறைமுகமாக கொழும்புத் துறைமுகம் மாறுவதாலும், பாதுகாப்பற்ற சூழ்நிலை அங்கு உருவாகிவிட்டதாலும், கொழும்புக்கு வரும் கப்பல்களின் எண்ணிக்கை குறைவடையவே பெரும் வாய்ப்புண்டு. இதனால், துறைமுகக் கட்டணங்கள்மூலம் சிறீலங்கா பெறும் வருமானம் வீழ்ச்சியடையும். அத்தோடு - ஏற்கெனவே பாதிப்படைந்திருக்கும் வெளிநாட்டு முதலீட்டுச் சூழலை, துறைமுகத் தாக்குதலும் இன்னும் மோசமாக்கியுள்ளது.

சாராம்சத்தில் - கொலன்னாவ, ஊறுகொடவத்த அதிரடித் தாக்குதல்; மத்திய வங்கிக் குண்டுத் தாக்குதல்; துறைமுகத் தாக்குதல் என்பவற்றைப் போன்று, ஒரு கிரமமான முறையில் பொருளாதார இலக்குகள் தொடர்ச்சியாகத் தாக்கப்படுமானால், சிறீலங்காப் பொருளாதாரம் கற்பனை செய்யமுடியாத பாரிய - பாதக விளைவுகளைச் சந்திப்பதுடன்,

தமிழர்களுக்கு எதிரான போரில், பாரிய திருப்புமுனைகளும் ஏற்படும் என்பதும் நிச்சயம்! O

www.eelamview.com

www.eelamview.com



# வீர வணக்கம்



மேஜர் ரவாஸ்
*(திருச்செல்வம் கிளமென்ற்)*
யாழ்ப்பாணம்.
28.08.1975



லெப். கேணல். ரதீஸ் / பிரதாபன்
*(அருமைச்சந்திரன் செந்தில்குமார்)*
01.08.1974 யாழ்ப்பாணம்.



மேஜர் ரதன்
*(வேலுப்பிள்ளை சுரேஸ்ராஜன்)*
திருமலை.
23.12.1972



மேஜர் ஜனார்த்தனன்
*(சிற்றம்பலம் கிருஷ்ணதாஸ்)*
யாழ்ப்பாணம்.
21.12.1971



மேஜர் பொய்யாமொழி
*(விசுவாசம் டானியல்)*
திருமலை.
23.05.1971



கப்டன் சுபாஸ்
*(மாரிமுத்து வசந்தகுமார்)*
திருமலை.
28.01.1974



மேஜர் பரன் / தென்னமுதன்
*(நாகேந்திரம் தங்கராசா)*
யாழ்ப்பாணம்.
25.09.1975



கப்டன் மதனி
*(கணபதிப்பிள்ளை தெய்வநந்தினி)*
யாழ்ப்பாணம்.
20.11.1976



கப்டன் விக்கி
*(இராசரத்தினம் சுமதி)*
யாழ்ப்பாணம்.
14.04.1975

---

இதுவரை - அரசியல், இராணுவ, பொருளாதார இலக்குகளைக் குறிவைத்த - தென்னிலங்கைத் தாக்குதல்கள், தரைக் களத்தில் நிகழ்ந்துவருவதிலிருந்து வேறுபட்டதாக, சிறீலங்காவின் பிரதான துறைமுகம் மீதான தாக்குதல் கடற்களத்தில் நடாத்தப்பட்டுள்ளது. அதாவது, 12.04.1996 அன்று, தென்னிலங்கைப் போர்முனையில் கடல்வழியிலான தாக்குதல் அரங்கு புதிதாகத் திறக்கப்பட்டுவிட்டது.

தனது கேந்திர மையங்களைக் காப்பதற்காக தென்னிலங்கையின் தரைப்பரப்பில் அதி உச்சநிலைப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ள சிங்களத் தரப்பானது இனி, தாக்குதல் அச்சுறுத்தல்களைத் தென்னிலங்கையைச் சூழ்ந்த கடற்பரப்பினூடும் எதிர்கொள்ளவேண்டிவரும் என்பதைக் காட்டியுள்ளதோடு -

வடக்கு - கிழக்கு கடற் பிராந்தியங்களைப் போல, இனி, மேற்குக் கடற் பிராந்தியத்தின் மேற்பரப்பிலும் உட் பரப்பிலும் தீவிர கண்காணிப்பு மிகக - அதிகூடிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யவேண்டிய சுமையையும் இத்தாக்குதல் கொடுத்துவிட்டது.

அத்தோடு - தென்பகுதிக்கு கடல்வழிமூலம் ஆபத்து வருகின்றது என்பது ஒருபுறமிருக்க - வடக்குக் கிழக்கு கடற் பிராந்தயங்களைப் போல, புலிகள், மேற்குக் கடற் பிராந்தியத்திலும் கொழும்பு வரை போர் அரங்கை விஸ்தரித்துவிட்டதைக் குறித்துக் காட்டுவதுடன் -

வர்த்தகக் கப்பல்கள் ஒருபுறமிருக்க, கடற்படை ஊர்திகளின் நகர்வுகளுக்கும் இப்பிராந்தியத்தில் உத்தரவாதமில்லாத நிலை தோன்றிவிட்டதையும் தெளிவுபடுத்துகின்றது.

இராணுவரீதியாக இத்தகைய ஆபத்துக்கள் சூழ்கின்றபோது - மேற்குக் கடற் பிராந்தியத்தினூடான போர்முறைத் திட்டமொன்று களத்தில் செயலாக்கம் பெறத் தொடங்கிவிட்ட பின்பு - இதன் விளைவாக, சிறீலங்காப் பொருளாதாரம் பாரிய பாதிப்புக்களை எதிர்கொள்ளப்போகின்றது என்பது வெளிப்படையாகின்றது.

கடற் கரும்புலிகளின் அதிரடிப் பிரிவு வீரர்கள் வெற்றிகரமாகத் தாக்குதலை நிறைவேற்றியபோதும், துறைமுகப் பகுதிக்குள் தாக்குதல் முறியடிக்கப்பட்டுவிட்டதாக சிங்களத் தரப்புக் கூறியது. ஆயினும், தாக்குதல் வீராகள் துறைமுகப் பகுதிக்குள் நுழைந்துவிட்டனர் என்ற செய்தியை அவர்களால் மறைத்துவிட முடியவிலலை.

உலகின் 38 ஆவது சிறந்த கொள்கலன் சேவைத் துறைமுகமாக விளங்கும் கொழும்புத் துறைமுகம் தாகுதல் முயற்சிக்கு உள்ளாக்கப்பட்டது என்ற செய்தியே, சிறீலங்காப் பொருளாதாரத்தில் பல்வேறு துறைகளில் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது - ஏற்படுத்தப்போகின்றது.

கொழும்புத் துறைமுகத்திற்கு கப்பல்கள் வருவதும், அங்கு தரித்து நிற்பதும் பாதுகாப்பற்றது - ஆபத்தானது - என சர்வதேச கப்பல் நிறுவனங்கள் கருதத் தொடங்கிவிட்டன. இதன் விளைவாக, இலங்கைக்கு வரும் கப்பல்

( 9 ஆம் பக்கம் பார்க்க)

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

www.eelamview.com